ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

புருஷோத்தம வித்யா



ஸ்ரீ புரீஜகந்நாத யாத்ரா

ஸ்தல மாஹாத்ம்ய விளக்கக் கையேடு

2013 செப்டம்பர் 06 – 16 வரை



பத்ராசலம்

ஸ்ரீராமன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: । ஸ்ரீமத் வரவரமுநயே நம: ॥

புருஷோத்தம வித்யா

ஸ்ரீ பூரீஜகந்நாத யாத்ரா

செப்டம்பர் 06 முதல் 16 வரை 2013



தொகுப்பு :

வேளுக்குடி ஸ்ரீ உ.வே. க்ருஷ்ணன் ஸ்வாமி

little mite

கிஞ்சித்காரம் ட்ரஸ்ட்

6, பீமஸேனா கார்டன் தெரு, மைலாப்பூர், சென்னை – 600 004.

போன் : 044 – 24992728.

பொருளடக்கம்

அச்சிட்டோர் :

ஆர்.என்.ஆர். பிரிண்டர்ஸ்

நெ : 19, தாண்டவராயன் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

போன் : 28447071.

31/2

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ।
ஸ்ரீமத் வரவரமுநயே நம: ॥

புருஷோத்தம வித்யா
ஸ்ரீ புரி ஜகந்நாத யாத்ரா
க்ஷேத்ர மாஹாத்ம்ய புத்தகம்

ஸ்ரீரங்க$_3$ம் கரிஶைலம் அஞ்ஜந கி$_3$ரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ
ஸ்ரீகூர்மம் புருஷோத்தமம் ச ப$_3$த$_3$ரீ நாராயணம் நைமிஶம் ।
ஸ்ரீமத் த்$_3$வாரவதீ ப்ரயாக$_3$ மது$_4$ரா அயோத்$_4$யா க$_3$யா புஷ்கரம்
ஸாளக்$_3$ராம கி$_3$ரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோऽயம் முநி: ॥

பகவத் ராமாநுஜர், திருவரங்கம், திருவேங்கடம், <u>அஹோபிலம், ஸிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம், புரி ஜகந்நாதம்,</u> பதரீ, நைமிசாரண்யம், த்வாரகா, ப்ரயாகம், மதுரா, அயோத்யா, கயா, புஷ்கரம், ஸாளக்ரமம் ஆகிய திவ்யதேசங்களுக்குச் சென்று மங்களாசாஸனம் செய்து இன்புறுகிறார்.

மேற்கண்ட ஶ்லோகப் பொருளில் அடிக்கோடிடப்பட்ட முக்யமான திவ்ய க்ஷேத்ரங்கள் மற்றும் மங்களகிரி, பத்ராசலம் ஆகிய திவ்ய க்ஷேத்ரங்களை தர்சிப்பதற்காக புருஷோத்தம வித்யா எனும் யாத்ரை ஏற்பாடாகியுள்ளது. அதைப் பயனுள்ளதாக்க நாம் அறிந்து கொள்ள வேண்டியவற்றையும், ஒவ்வொரு க்ஷேத்ரத்தின் பெருமைகளையும் இனிப்பார்ப்போம்.

காலி கோபுரம்

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் ராஜா வாசி ரெட்டி வேங்கடாத்ரி நாயுடு என்பவர், 153 அடி உயரமுள்ள 11 நிலைகளுள்ள இக்கோபுரத்தைக் கட்டினார்.

க்ஷீர வ்ருக்ஷம்

மங்களகிரியில், பால் மரம் என்று பெண்டிரால் போற்றப்படும் இம்மரம் வேறு யாருமல்ல – தேவ ரிஷியான நாரதரே. ஶஶபந்தி எனும் மன்னனைக் குறித்து, அவன் தன் மனைவி மக்களைத்துறந்து க்ஷேத்ராடனம் போக நாரதர் உபதேசித்தார். மன்னனும் அப்படியே செய்ய, இது கண்டு கோபமுற்ற ராணி, நாரதரை இம்மலையில் ஒரு பால் மரமாக இருக்கும்படி ஶபித்தாள். நாரதர் இதனையே ஒரு வரமாக ஏற்று, இங்கு மக்கட்பேறு வேண்டி வரும் பெண்களுக்கு ஸந்தான ப்ராப்தி வரத்தினை அருளுகிறார்.



ஸ்ரீ பாநக நரஸிம்ஹர்

ஸ்ரீ:

ஸிம்ஹாசலம்



ஒவ்வொரு வியாழன் அன்றும் ஸ்ரீ வராஹந்ருஸிம்ஹர் அடியார்களுக்கு அருளும் அழகான அரியுருவக் காட்சி

ப்ரஹ்லாத$_3$னை ரக்ஷிப்பதற்காக ஸ்ரீமந்நாராயணன் ஸிம்ஹாசலத்தில் வராஹ நரஸிம்ஹனாக அவதரித்தார். ப்ரஹ்லாத$_3$னை ஹிரண்யன் ஸிம்ஹாசலத்தின் அருகிலிருக்கும் (விசாகப்பட்டணத்தின் அருகிலிருக்கும்) கடலில் தள்ளிவிட, ப்ரஹ்லாதன் 'த்ராஹி, த்ராஹி' என்று ப$_4$க$_3$வானைச் சரணம் புக ஸ்ரீமந்நாராயணன் கஜேந்த்$_3$ராழ்வானை ரக்ஷிப்பதற்கு வந்த வேக$_3$த்தை விட ஶீக்$_4$ரமாகக் குதித்து அவிழும் பீதாம்ப$_3$ரத்தை முடிச்சிட்டால் நேரம் கடந்துவிடும் என்று ஒரு திருக்கையில் பீதாம்ப$_3$ரத்தைப் பிடித்துக் கொண்டு மற்றொரு திருக்கையிலுள்ள கட்டை விரலால் கருட$_3$னுக்கு வாயில் அம்ருதத்தைக் கொடுத்துக் கொண்டு குதித்தார். குதித்த அந்த வேக$_3$ம் தாளாமல் பூ$_4$மி பிளந்து ப$_4$க$_3$வான் திருவடிகள் பாதாளம் வரை சென்றன. அப்படிக் குதித்த பெருமான் ஹிரண்யனுடன் (ஹிரண்யகஶிபுவுடன்) த்$_3$வாத்ரிம்ஶத்$_3$ (32) ரூபங்கள் எடுத்து யுத்$_3$த$_4$ம் செய்தார். அதில் ஒன்றுதான் வராஹந்ருஸிம்ஹாவதாரம். ப்ரஹ்லாதனுக்காக எடுத்த அதே திருவுருவத்துடன் அர்ச்சாமூர்த்தியாக எல்லாருக்கும் ஸேவை ஸாதி$_4$க்கிறார். சிறிது காலம் ப்ரஹ்லாதன் இவரை ஆராதி$_4$த்தார். பிறகு தன் ராஜ்யத்துக்குத் திரும்பினார். அந்த சமயம் பெருமானுக்குத் திருவாராத$_4$நம் இல்லாமல் போய் பெருமானை வல்மீகம் (புற்று) மூடிக்கொண்டது. இந்த இடம் காடாக மாறியது.

காலக்ரமத்தில் புரூரவஸ் சக்ரவர்த்தி இந்த இடத்தைக் கடக்கும்போது அவரது விமானம் இந்த இடத்தைத் தாண்ட

முடியவில்லை. வியந்த புரூரவஸ் கீழே இறங்க ப$_4$க$_3$வான் கனவில் தோன்றி 'நான் இங்கு இருக்கிறேன்' என்று சொல்ல புரூரவஸ் காட்டில் தேட ஆரம்பித்தார். அவருக்கு ப$_4$க$_3$வான் கிடைக்கவில்லை. புரூரவஸ் எம்பெருமானை வேண்ட, இங்கிருக்கும் 'க$_3$ாங்க$_3$த$_4$ாரா' என்ற தீர்த்த$_2$த்தின் அருகிலிருக்கும் புற்றில் தான் இருப்பதாக எம்பெருமான் அருளினான்.

க$_3$ாங்க$_3$த$_4$ாராஸமம்தீர்த்த$_2$ம் க்ஷேத்ரம் ஸிம்ஹாத்$_3$ரிநாஸமம் ।
நாரஸிம்ஹஸமோ தே$_3$வ: த்ரைலோக்யே நாஸ்தி நிஶ்சய: ॥

என்ற சிலாசாஸநம் க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் உள்ளது. எம்பெருமானைப் புற்றிலிருந்து வெளியே எழுந்தருளப் பண்ணி க$_3$ாங்க$_3$த$_4$ாராதீர்த்த$_2$த்தில் திருமஞ்ஜனம் செய்து ப்ரதிஷ்டை$_2$ செய்தான். ப்ரதிஷ்டை$_2$ செய்த நாள் வைஶாக சுக்ல த்ருதீயையாகும். இது அக்ஷயத்ருதீயை என்று கொண்டாடப்படுகிறது. அன்று சந்த$_3$நோத்ஸவம் என்ற உத்ஸவம் நடக்கிறது. அன்று எம்பெருமானின் நிஜரூபத$_3$ர்ஶநம் எல்லாருக்கும் கிட்டுகிறது. அதாவது அன்று சந்தநக்காப்பு இல்லாமல் ஸேவை ஸாதி$_4$க்கிறார்.

3 மணுகு சந்த$_3$நம் என்றால் சுமார் 125 கிலோ சந்த$_3$நமாகும்.

வைசாக சுக்ல த்ருதீயையன்று 3 மணுகு சந்தனம் சாற்றுகிறார்கள்.

வைசாக பௌர்ணமியன்று 3 மணுகு சந்தனம் சாற்றுகிறார்கள்.

ஜ்யேஷ்ட$_2$ பௌர்ணமி (ஆனி பௌர்ணமி)யன்று 3 மணுகு சந்தநம் சாற்றுகிறார்கள்.

ஆஷாட$_4$ பௌர்ணமி (ஆடி பௌர்ணமி)யன்று 3 மணுகு சந்தனம் சாற்றுகிறார்கள்.

ஆக 12 மணுகு (சுமார் 500 கிலோ) சந்தநத்துடன் எம்பெருமான் எப்பொழுதும் ஸேவை ஸாதி$_4$க்கிறான்.

பெருமானுக்குத் திருமஞ்ஜநம் மற்றும் ப்ரஸாத$_3$த்துக்காக இன்றும் கா$_3$ங்க$_3$தா$_4$ரதீர்த்த$_2$ம் மட்டுமே உபயோகப்படுத்தப்படுகிறது.

ஸ்ரீ ஸிம்ஹாசல க்ஷேத்ர மாஹாத்ம்யம் முற்றிற்று.

ஸ்ரீ வராஹ நரஸிம்ஹ ஸ்வாமியின் த்3வாத்ரிம்ஶத் (32) திருநாமங்கள்

ஸ்த2ம்போ4த்3ப4வ	நரஸிம்ஹர்	காரஞ்ச	நரஸிம்ஹர்
பாவந	நரஸிம்ஹர்	க3ருடா3ரூட4	நரஸிம்ஹர்
பஞ்சமுகி2	நரஸிம்ஹர்	க3ண்ட3பே4ரண்ட3	நரஸிம்ஹர்
ப்ரஹ்லாத3வரத3	நரஸிம்ஹர்	வராஹ	நரஸிம்ஹர்
ஜ்வாலா உக்3ர	நரஸிம்ஹர்	அஹோபி3ல	நரஸிம்ஹர்
யோகா3ஸ்ரீ	நரஸிம்ஹர்	ஸ்ரீவித்3யா	நரஸிம்ஹர்
சாளக்3ராம	நரஸிம்ஹர்	யோக3பட	நரஸிம்ஹர்
யோகா3நந்த3	நரஸிம்ஹர்	மாலோல	நரஸிம்ஹர்
வீர	நரஸிம்ஹர்	க்ரோடா4	நரஸிம்ஹர்
ஸர்வதோமுக2	நரஸிம்ஹர்	அப4ய	நரஸிம்ஹர்
ஸ்ரீமஹாவிஷ்ணு	நரஸிம்ஹர்	லக்ஷ்மீ	நரஸிம்ஹர்
சா2த்ரவட	நரஸிம்ஹர்	ஸ்ரீவித்3யாசக்ரா	நரஸிம்ஹர்
ராஜ்யலக்ஷ்மீ	நரஸிம்ஹர்	யோக3வட லக்ஷ்மீஸிம்ஹ	நரஸிம்ஹர்
ஸ்ரீபா4ர்க3வ	நரஸிம்ஹர்	கி3ரிஜா	நரஸிம்ஹர்
ஸ்ரீ ஸுத3ர்ஸந	நரஸிம்ஹர்	கல்யாண	நரஸிம்ஹர்
வ்யாக்4ர	நரஸிம்ஹர்	வராஹலக்ஷ்மீ	நரஸிம்ஹ

ஸ்ரீ:


ஸ்ரீகூர்மம்

ஸ்ரீகூர்மக்ஷேத்ரமாஹாத்ம்யமானது அஷ்டாத$_3$ஶ புராணங்களில் ஒன்றான ப்$_3$ரஹ்மாண்ட$_3$ புராணந்தர்க$_3$தமான பாத்$_3$மபுராணத்தில் சொல்லப்பட்டது. இந்த கூர்மக்ஷேத்ரத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் க$_3$ாரா என்ற ப்ராந்தியத்தில் 'சாலிஹுண்ட$_3$ா' என்ற இடம் உள்ளது. இவ்விடங்களை ஶ்வேதசக்ரவர்த்தி ஆண்டு வந்தார். அவருடைய கோட்டைதான் சாலிஹுண்டா. 'வம்ஶத$_4$ாரா' என்ற நதியால் சூழப்பட்டிருக்கின்றன இவ்விடங்கள். ராணியின் பெயர் ஹரிப்ரியா. ராணி, பீ$_4$ஷ்ம ஏகாத$_3$ஶிவ்ரதம் இருக்கும்போது காமத்துக்கு வஶப்பட்ட ராஜா, ராணியிடம் செல்ல, வ்ரதத்திலிருக்கும் ராணி ப$_4$க$_3$வானை வேண்ட, இருவருக்கும் இடையில் ஒரு பெரிய ஊற்று பிறந்தது. அதுதான் வம்ஶத$_4$ாரா. ராஜா ஏமாற்றத்துடன் கோட்டைக்குத் திரும்பினார். வருத்தத்தில் இருந்த அவரைப் பார்த்த நாரதர் அவருக்கு (ராஜாவுக்கு) கூர்ம மந்த்ரத்தை உபதே$_3$ஶித்து, இங்கிருக்கும் எட்டு புண்ய தீர்த்த$_2$ங்களில் நீராடி தவம் புரியும்படி சொன்னார். அரசனும் அவ்வாறே கடுந்தவம் புரிந்தான். ஸ்ரீமஹாவிஷ்ணு ப்ரத்யக்ஷமாகி 'என்ன வரம் வேண்டும்'? என்று கேட்டார். ஶ்வேதசக்ரவர்த்தியும் எம்பெருமானை கூர்மாவதாரத்தில் எல்லாருக்கும் ஸேவை ஸாதி$_4$க்கவேணுமென்று ப்ரார்த்தித்தார். மற்ற அவதாரங்களை அந்தந்தக் காலத்தில் இருப்பவர்கள்தாம் ஸேவித்திருப்பார்கள். ஆனால் மந்தரமலை கடலுக்குள் அழுந்திவிடாமல் இருப்பதற்காகப் பண்ணின கூர்மாவதாரத்தை தே$_3$வர்களும் த$_3$ாநவர்களும் கூட ஸேவிக்காமல்விட்டார்கள். அமுதத்தை மட்டும் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால் அந்த அவதாரகாலத்தில் அவர்கள் இருந்துங்கூட ஸேவிக்காமல் இருந்தார்கள். அந்தக் குறைதீர உலகில் எல்லாருக்கும் ஸேவை ஸாதி$_4$க்க கூர்மரூபியாக இங்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தி$_2$த்தான் அரசன். ப$_4$க$_3$வானும் இசைந்து ராஜாவின் பெயரிலேயே மலையை ஏற்படுத்தினார்.

‘ஶ்வேதாசலநிவாஸாய கூர்மநாத$_2$ாய மங்களம்’ என்பது இந்த திவ்யதேசத்து எம்பெருமானுக்கான மங்களஶ்லோகம். இந்த ஆலயத்தைப் பிரமன் ஏற்படுத்தினார். இங்கே நூற்றெட்டு (108) வித$_4$மான தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தீர்த்த$_2$ம் கிடைக்காமல் போக ப$_4$க$_3$வானே தன் சக்ரத்தால் குளத்தை ஏற்படுத்த ‘சக்ரதீர்த்த$_2$ம்’ இங்கு உண்டாயிற்று. அக்குளத்திலிருந்துதான் ‘தாயார்’ அவதரித்தார். க்ருதயுக$_3$த்தில் பிரமன், த்ரேதாயுகத்தில் லவகுஶர்கள், த்$_3$வாபரயுகத்தில் ப$_3$லராமன் ஆகியவர்கள் இந்த ப$_4$க$_3$வானுக்கு ஆராத$_4$நம் செய்திருந்தார்கள். கலியுக$_3$த்தில் எம்பெருமானார் எழுந்தருளி மங்களாஶாஸநம் செய்தார்.

ஸ்ரீகூர்ம க்ஷேத்ர மாஹாத்ம்யம் முற்றிற்று.

ஸ்ரீகூர்ம மூர்த்தி



ஸ்ரீ:

புரி ஜகந்நாத க்ஷேத்ரம்

வர்ஷாணாம் பா$_4$ரத: ஶ்ரேஷ்ட$_2$: தேஶாநாம் உத்கல: ஸ்ம்ருத: ।
உத்கலஸ்ய ஸமோ தே$_3$ஶ: தேஶோ நாஸ்தி மஹீதலே ॥

வர்ஷங்களுக்குள் பாரதமும், தேசங்களில் உத்கலமும் (ஒடிஷா) ஒப்பு உயர்வற்றவை.

இந்த உத்கல க்ஷேத்ரம் என்பது சங்க க்ஷேத்ரம் (புரி), பத்ம க்ஷேத்ரம் (கோனாரக்) சக்ர க்ஷேத்ரம் (புவனேச்வர்), கதா க்ஷேத்ரம் (ஜாஜபுரா) ஆகியவற்றை உள்ளடக்கியது. இவை அனைத்தும் சேர்த்து சுமார் 100 சதுரமைல் பரப்பளவு உள்ளது. இவற்றுள் 5 க்ரோசங்கள் (10 மைல்கள்) உள்ள புரி க்ஷேத்ரம் சாலச் சிறந்தது. திருமாலின் சங்க வடிவத்தில் இருக்கும் இத்தலத்தின் 6 மைல்கள் கடலுக்குள்ளும், 4 மைல்கள் நிலத்திலும் உள்ளன. சுமார் 20 கிலோமீட்டர் சுற்றளவு உள்ள இத்தலத்தை பகவானின் சங்கம் தோன்றிய நாளான மார்கழி மாதத்து தேய்பிறையின் பஞ்சமி அன்று வலம் வருவது மரபு. இத்தலத்தின் மாஹாத்ம்யத்தை பாத்ம புராணம், ப்ரஹ்ம புராணம், ஸ்கந்த புராணம் ஆகியவற்றில் கூறியபடி இங்கு பார்ப்போம்.

சார் (நான்கு) தாம் – பதரீ, புரி, ஸ்ரீரங்கம், த்வாரகா ஆகியவை பாரதத்தின் நான்கு எல்லைகளில் இருக்கும் புண்ய க்ஷேத்ரங்கள். இந்த நான்கு க்ஷேத்ரங்களுக்கும் யாத்ரை செல்வது பரம பாவநமாகக் கருதப்படுகிறது. ஸ்ரீமந் நாராயணன், விடியற்காலையில் பதரியில் நீராடி, த்வாரகாவில் வஸ்த்ரம் தரித்து, புரியில் அமுது செய்து, திருவரங்கத்தில் சயனிக்கிறார். இதில் புரி ஜகந்நாதம் கீழ்க்கண்ட பெயர்களோடு விளங்குகிறது.

ஸ்ரீ க்ஷேத்ரம் : ஸ்ரீமஹாலக்ஷ்மியின் கேள்வனே புருஷோத்தமன் என்று வேதாந்தம் கூறுகிறது. ஆகவே புருஷோத்தமன் உறையும் இவ்விடம் ஸ்ரீக்ஷேத்ரம்.

ஶங்க க்ஷேத்ரம் : இவ்விடம் திருமாலின் ஶங்க வடிவத்தில் இருப்பதால் இப்பெயர்.

புருஷோத்தம க்ஷேத்ரம் : அபுருஷன் என்று அறிவற்ற ஜடமான அசேதனப் பொருள்களையும், புருஷன் என்று ப₃த்₃த₄ (உலகியற் கட்டுண்ட) ஜீவர்களையும், உத்புருஷன் என்று முக்த ஜீவர்களையும், உத்தர புருஷன் என்று நித்ய ஸூரிகளையும் சொல்வர். இவர்கள் அனைவரையும் விட மிகவும் உயர்ந்தவனான பகவான் உத்தம புருஷன் எனப்படுகிறான். இதைக் கண்ணன் கீதை பதினைந்தாம் அத்யாயத்தில் விளக்குகிறார். அந்த புருஷோத்தமன் கோயில் கொண்டிருக்கும் இவ்விடம் புருஷோத்தம க்ஷேத்ரம்.

நீலாசலம் : இவ்விடம் நீல மலையில் உள்ளபடியால் இப்பெயர். இதுவே இவ்விடத்தின் புராதனப் பெயர்.

பூஸ்வர்கம் : ஸ்வர்கத்தில் உள்ள மிதமான தட்பவெப்பமும், இன்பமும் இங்கு எப்போதும் இருக்கிறபடியால் இது பூலோகத்தில் உள்ள ஸ்வர்கம் எனப்படுகிறது.

நரஸிம்ஹ க்ஷேத்ரம்: இத்திருக்கோயில் கட்டி முடிக்கப்பட்டவுடன் ப்ரஹ்மா ஒரு யாகம் செய்ய அதிலிருந்து ஸ்ரீநரஸிம்ஹர் உக்ர வடிவத்துடன் தோன்றி, பின் சாந்தமடைந்தார். ஆகவே இவ்விடத்திற்கு இப்பெயர்.

ஸ்தல புராணம்

க்ருத யுகத்தில், சிறந்த விஷ்ணு பக்தனான இந்த்ரத்யும்நன் எனும் அரசன் அவந்தி நகரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மலய தேசத்தை ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் தன் குல குருவினிடம் "பகவானை நேருக்கு நேரே தர்சிக்கும் பெருமையுடைய புண்ய க்ஷேத்ரத்தைக் கண்டுபிடித்துக் கூறுங்கள்" என்றான். குருவும் க்ஷேத்ராடனம் போய் வரும் யாத்ரிகர்களிடம் வினவ, அதில் ஒருவர் "நான் அனைத்துப் புண்ய க்ஷேத்ரங்களையும் தர்சிக்கும் பாக்யம் பெற்றவன். பாரத வர்ஷத்தில் உத்கலதேசத்தில் (ஒடிஷா) கடலுக்கு வடக்கே இருப்பது புருஷோத்தம க்ஷேத்ரம். அங்கு அடர்ந்த

கானகத்தின் நடுவே கம்பீரமான நீலமலை உள்ளது. அங்கிருக்கும் கல்பவடம் எனும் ஆலமரத்தின் மேற்கே ரோஹிணி குண்டம் எனும் புண்ய தீர்த்தம் உள்ளது. அதன் கிழக்கே, ஒளிவிடும் நீல மணியாலான வாஸுதேவர் கோயில் கொண்டுள்ளார். தீர்த்தத்துக்கு மேற்கே ஸபர் தீபக் எனும் ஆச்ரமத்திலிருந்து சற்றுத் தொலைவில் பகவான் ஜகந்நாதர் கோயில் கொண்டுள்ளார். ஒரு முழு ஆண்டு அவருக்குத் தொண்டு செய்யும் பாக்யம் இந்த ஏழைக்குக் கிடைத்தது. மன்னா! தாங்கள் உடனே அங்கு சென்றால் பகவானை நேரே தர்சிக்கலாம்" என்று கூறி மறைந்தார். உடனே அரசன் குலகுருவிடம், நீலாசலம் சென்று ஜகந்நாதனை தர்சித்து மோக்ஷம் பெற உதவ வேண்டினான். குருவும் தன் தம்பி வித்யாபதியை முதலில் அங்கு சென்று விவரம் அறிந்து வரச் சொன்னார்.

வித்யாபதி ஒரு சுபமுஹுர்த்த தினத்தில் சில பக்தர்களோடு தேரில் நீலாசலத்தை நோக்கிப் புறப்பட்டார். விரைவில் மஹாநதியை அடைந்து அநுஷ்டானங்களை முடித்து ஏகாம்பர கானனம் என்ற புவனேச்வரத்தைத் தாண்டி தூரத்தில் நீலாத்ரியைக் கண்டார். தீர்த்த யாத்ரிகர் வர்ணித்தபடியே மலை உச்சியில் கல்ப வடத்தை தர்சித்தார். உடனே பெருமானை தர்சிக்க நினைத்தாலும் இரவாகிவிட்டபடியால் இருட்டில் அடர்ந்த காட்டில் செல்வதற்கு வழிகாட்ட ஆளில்லாமல் அங்கேயே தங்கினார். அப்போது சிலரின் குரல் கேட்டுத் தொடர்ந்து சென்றபோது ஸபர் (மலைவாஸி) தீபக் ஆச்ரமத்தை அடைந்தார். அங்கு பல வைஷ்ணவர்களோடு இருந்த விச்வாவஸு இவரை வரவேற்று ப்ரஸாதம் அளித்து ஓய்வெடுக்கச் சொன்னார். ஆனால் வித்யாபதி "நான் நல்ல செய்தியோடு போனால்தான் எங்கள் மன்னர் உபவாஸத்தை முடிப்பார். ஆகவே உடனடியாக மலைமேல் போகவேண்டும்" என்று சொல்ல விச்வாஸுவும் "இந்த்ரத்யும்நன் என்னும் மன்னன் இங்கு வந்து தங்குவார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். போவோம் வாருங்கள்" என்று இருளில் வழி காட்டினார். போகப் போக பாதை குறுகியும் முள் நிறைந்ததாயும் இருந்தது. விடியலில் புண்யமான ரோஹிணி குண்டத்தை தர்சித்தனர். பின் கல்ப வடத்தை வணங்கி, இவ்விரண்டுக்கும் நடுவே

உள்ள தோப்பின் உள்ளே சென்று பேரொளியோடு எழுந்தருளியிருந்த பகவானை வியந்து வணங்கினார். பின், வேகமாக மலையிரங்கி ஆச்ரமத்தை அடைந்து விஶ்வாவஸு கொடுத்த அமாநுஷ்யமான சுவை உடைய மஹாப்ரஸாதத்தை உண்டார். "இந்த்ரன் சமைத்து ஜகந்நாதனை ஆராதித்து அதன் ஶேஷமான இந்த ப்ரஸாதத்தை உண்டால் பாபமெல்லாம் தொலையும்" என்று ஜகந்நாத ப்ரஸாதத்தின் பெருமையை உரைத்தார் விஶ்வாவஸு. உடனே வித்யாபதி "எங்கள் மன்னர் இங்கு வந்து நீல மாதவனை தர்சித்து ஒரு பெரிய கோயிலை எழுப்பி சிறப்பான பூஜை முறைகளையும் ஏற்படுத்துவார்" என்றார். ஆனால் விஶ்வாவஸு "மன்னார் வருவார். ஆனால் இப்போது இருக்கும் பெருமான் அவர் கண்ணுக்குப்படாமல் மறைந்து விடுவார். மன்னன் உபவாஸம் இருக்க, பகவான் வேறு மர உருவத்தில் தோன்றி, ப்ரஹ்மாவால் ஸ்தாபிக்கப்பட்டு, பின் நெடுங்காலம் காட்சி கொடுப்பார். ஆனால் இவ்வுண்மைகளை மன்னனிடம் வெளியிடவேண்டாம்" என்று வேண்டினார். வித்யாபதி விடை பெற்றுக்கொண்டு புருஷோத்தம க்ஷேத்ரத்தை ப்ரதக்ஷிணம் செய்து மீளவும் அவந்தி புரியை அடைந்தார்.

திரும்பிய வித்யாபதியின் உத்ஸாஹத்தைக் கண்ட மன்னன் போன கார்யம் ஸித்தித்தது என்று உவந்து அவரை உபசரித்தான். குலகுருவின் தம்பி தன் அநுபவத்தை மன்னனிடம் விளக்கி ஜகந்நாத ப்ரஸாதத்தைக் கொடுத்தார். நீல மாதவனின் சொல்லொணா வடிவழகைக் கேட்ட இந்த்ரத்யும்னன் உடன் அங்கு செல்ல விருப்பம் கொண்டான். அப்போது தெய்வ ஸங்கல்பத்தால் நாரத ரிஷி அங்கு வந்து 'மன்னனின் விருப்பம் ஈடேறும்' என்று ஆசீர்வதித்தார். ஜ்யேஷ்ட மாதத்தின் பஞ்சமி திதியன்று அவர், நாரதர், ராணி, ப்ரஜைகள் ஆகியோர் புடை சூழ, தேரில் புறப்பட்டு அன்றிரவே மஹாநதியின் கரையை அடைந்து தங்கினார். உண்டு முடித்து, நாரதர் புருஷோத்தம வைபவம் கூறிக்கொண்டிருந்தபோது வாயிற்காப்போன் வந்து உத்கல தேசத்து மன்னன் காண வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

இரு மன்னர்களும் ஒருவரை ஒருவர் நமஸ்கரித்தனர். உத்கல மன்னன், "தங்கள் வரவு நல்வரவு ஆகுக; ஆயின் தற்போது ஒரு சூறாவளியால் தாங்கள் தர்சிக்க நினைக்கும் நீல மாதவன் மண்ணால் மூடப்பட்டுள்ளார். நாட்டைப் பல ஆபத்துக்கள் சூழ்ந்துள்ளன. உங்கள் வரவு அவற்றைத் தீர்க்கும் என நம்புகிறேன்" என்று கூறினார். இந்த்ரத்யும்நனின் கவலையைத் தீர்ப்பதற்காக நாரதர், "அனைத்தும் ப்ரஹ்மா கூறியபடியே நடக்கிறது. பகவான் நான்கு உருவங்களோடு உனக்குத் தோன்றுவார். என்னோடு வா! நல்லதே நடக்கும்" என்றார். அனைவரும் நீலாசலத்தை நெருங்கும்போது ஓர் உக்ரமான நரஸிம்ஹ விக்ரஹத்தைக் கண்டனர். மேலும் நீல மாதவன் மண்ணால் மூடப்பட்டிருப்பதையும் கண்டனர். நாரதர் கூறியபடி நரஸிம்ஹப் பெருமானை மேற்கு முகமாக எழுந்தருளப் பண்ணி அருகே யஜ்ஞ சாலை அமைத்து ஆயிரம் அச்வமேத யாகங்களைச் செய்யத் தொடங்கினான். அனைத்தும் முறைப்படி நடந்து முடியும் தருவாயில் மன்னன் தன் த்யானத்தில் ஶ்வேத த்வீபத்தைக் கண்டான். அது ஸ்படிகக்கல்லால் ஆக்கப்பட்டு பாற்கடலால் சூழப்பட்டிருந்தது. அங்கு ஆதிஶேஷ பீடத்தில் ஸ்ரீமந்நாராயணன் சதுர்புஜனாய் எழுந்தருளியிருந்தார். இக்கனவை மன்னன் கூற நாரதர், "பெருமான் எழுந்தருளும் தருணம் நெருங்கிவிட்டது. அவர் மரக்கட்டையாக (தாரு) உருவெடுக்க விருக்கிறார். வா! கடற்கரைக்குச் செல்வோம்" என்றார். கிழக்குக் கடலில் வெண் படலம் உருவாகி அங்கு ஒளிவிடும் ஒரு மரம் உருவாகி மிதந்து வந்தது. அவ்விடம் 'சக்ர தீர்த்தம்' எனப்படுகிறது. அந்த மரக்கட்டையை பக்தியோடு ராஜாவும் ராணியும் பெற்றுக் கொண்டனர். உடன் ஓர் அசரீரி வாக்கு "இம்மரத்தை வஸ்த்ரத்தில் சுற்றி வையுங்கள். சில நாட்கள் கழித்து ஒரு தச்சன் வந்து செதுக்குவார். அப்படிச் செதுக்கும் போது யாரும் உள்ளே செல்லக்கூடாது. செதுக்கும் ஒலி வெளியில் கேட்காதபடி வாத்யம் வாசிக்கவும்" என்று ஒலித்தது. அரசர் அதன்படியே செய்தார். தச்சன் வந்து செதுக்கத் தொடங்கினார். பதினைந்து நாட்கள் சென்றன. செதுக்கும் ஒலி நின்றது. ராணி குண்டிசா கதவைத் திறந்து பார்க்க விரும்பினாள்.

அரசன் தடுத்தும் கேளாமல் ராணி அறையைத் திறக்க ஆணையிட்டாள். திறந்த போது தச்சன் அங்கில்லை. விக்ரஹங்கள் பாதி முடிந்த நிலையில் இருந்தது கண்டு அனைவரும் திகைத்தனர். ஆனால் அசரீரி வாக்கு "பகவான் இந்த எளிய நிலையிலேயே இங்கு தர்சனம் கொடுப்பார்" என்று கூறவே, அன்று முதல் ஜகந்நாதப்பெருமான் அவ்வண்ணமே இங்கு கோயில் கொண்டுள்ளார்.

புருஷோத்தமன் இவ்வுருவத்தில் இருக்கும் ரஹஸ்யம்

கண்ணன் த்வாரகையில் தன் அஷ்ட மஹிஷிகளுடன் ஆனந்தமாக ராஜ்யத்தை ஆண்டபோதும், அவர் நினைவில் கோகுலப்பெண்டிரே நிறைந்து இருந்தனர். இதன் காரணத்தை அறிய முற்பட்ட எட்டு ராணிகளும் ரோஹிணி தேவியை வினவினர். ரோஹிணி தேவி "கோகுலத்தில் நடந்த ரஸமான லீலைகள் போல் வேறெங்கும் நடந்தது இல்லை. அதுவே காரணம்" என்று சொல்ல, கோகுல லீலைகளை மஹிஷிகள் கேட்க விருப்பம் கொண்டனர். ரோஹிணி மாதா, "கூறுகிறேன்; ஆனால் கண்ணனும் பலராமனும் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார். காவலுக்கு ஸுபத்ராவை நிறுத்தி விட்டு அனைவரும் கதை கேட்கத் தொடங்கினர். கதையில் லயித்துத் தன்னையே மறந்த ஸுபத்ரா, அருகில் இரு புறத்திலும் ராம - க்ருஷ்ணர்கள் வந்து நின்றதை கவனிக்கவில்லை. கதை கேட்டு, மூவரும் மெய்மறந்து, கைகால்கள் சுருங்கி, விழிகள் விரிய நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த நாரதர் அவ்வரிய ஸேவையைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினார். மூவரும் தம் நிலையினை உணர்ந்து, இயல்வு நிலையை அடைய முயன்றனர். நாரதர் அதைத் தடுத்து "தேவரீர் ஆனந்தத்தில் மயங்கி நிற்கும் இந்நிலையை தர்சித்தால் பக்தர்கள் அனைவரும் பாபம் தொலைந்து முக்தி அடைவார்கள். ஆகவே தயை கூர்ந்து இந்த விநோதமான எளிய திருக்கோலத்தோடு இங்கு எப்போதும் கோயில் கொண்டருளவேணும்" என்று கேட்டுக்கொள்ள அதன்படியே இன்றும் எழுந்தருளியுள்ளார் 'பத்துடையடியவர்க்கு எளியனான' எம்பெருமான்!

கடைத்தலை சீய்த்த அரசன்

'கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே' என்ற உபதேசத்தால் ஸ்வாமி நம்மாழ்வார், 'திருவனந்தபுரம் அனந்தபத்மநாப ஸ்வாமி ஸன்னிதியில் குப்பை போகப் பெருக்கினால் நம் பாபங்களும் தொலையும்' என்கிறார். ஆனால் புரி க்ஷேத்ரத்தில் ஜகந்நாதனின் ரத யாத்ரைக்கு முன் பெருக்கிய அத்தேசத்து அரசன் புருஷோத்தமனுக்கு கல்யாணமே நடந்தது. (ஆண்டு தோறும் அரசன் ரத யாத்ரைக்கு முன் தங்கத் துடைப்பத்தால் பெருக்குவது மரபு.) மன்னன் ஒரு முறை காஞ்சீபுரம் சென்று வரதராஜப் பெருமானை தர்சித்தான். காஞ்சீ மன்னனின் மகளைக் கண்டு மையல் கொண்டான். இரு மன்னர்களும் ஸம்மதித்தனர். புருஷோத்தமன் புரி திரும்பினான். காஞ்சீ மன்னன் முறையாகப் பேசி முடிப்பதற்காகத் தன் மந்த்ரியை புரி அனுப்பினான். அவ்வமயம் ரத யாத்ரை நாளாக இருக்கவே, மன்னன் புருஷோத்தமன் ரதம் வரும் பாதையை துப்பரவு செய்தான். மன்னன் தாழ்ந்த செயலில் ஈடுபட்டதாகக் கருதி, அது பொறுக்காத மந்த்ரி காஞ்சீ திரும்பி மன்னனிடம் கூற, பெண் கொடுப்பதில் தடை ஏற்பட்டது. இதனைத் தனக்கு நேர்ந்த அவமானமாகக் கருதிய புரி அரசன் காஞ்சீ நகரின் மேல் படையெடுத்தான். ஆனால் அவன் படை சிறியது. இரு மன்னர்களும் – புரி படை தோற்றால் ஜகந்நாதர் பலபத்ரர், ஸுபத்ரா மற்றும் ஸுதர்சனர் விக்ரஹங்களை காஞ்சிக்குக் கொடுத்து விட வேண்டும் என்றும், காஞ்சி படை தோற்றால் அவர்கள் ஆராதிக்கும் விநாயகர் விக்ரஹத்தை புரிக்கு கொடுத்து விட வேண்டும் என்றும் – சபதம் செய்தனர். புருஷோத்தமன் ஜகந்நாதரிடம் "தேவரீரது அருளால் அடியேனது சிறிய படை வெற்றி பெற வேணும்" என்று வேண்டினான். அரசன் புறப்பட்டபோது ஜகந்நாதர் கருப்புப் புரவியிலும், பலராமர் வெள்ளைக் குதிரையிலும் ஆரோஹணித்து, யாரோ இரு வீரர்கள் போல் காஞ்சி நோக்கிச் சென்றனர். வழியில் ஒரு க்ராமத்தில் தாகத்துக்காக ஒரு முதிய இடைப்பெண்ணிடம் மோர் வாங்கிக் குடித்தனர். கையில் காசில்லாததால் மோதிரத்தைக் கொடுத்து, அவ்வழியே வரப்போகும் மன்னனிடம் மோதிரத்தைக்

காட்டிப் பணம் பெற்றுக் கொள்ளச் சொன்னார்கள். புருஷோத்தமன் தன்படையொடு அவ்வழி வர, முதியவள் கொடுத்த மோதிரத்தைக் கண்டு வியந்து பகவானே தனக்காகப் போரிடுவதை நினைத்து உருகினான். இரு வீரர்களின் உதவியால் போர் முடிந்து புரி மன்னன் வெற்றி பெற்றான். காஞ்சி இளவரசியைச் சிறையெடுத்து வந்து புரியில் மந்த்ரியிடம் "இவளை தெருவைத் துப்பரவு செய்யும் ஒருவனுக்கு மணம் முடியுங்கள்" என்று பழி தீர்க்கும் வகையில் ஆணையிட்டான். பக்தரான மந்த்ரி இளவரசியிடம் தனிமையில் பேசி, அவளின் பக்தியையும் மன்னனிடம் அவள் கொண்ட காதலையும் அறிந்து அவர்களை சேர்த்து வைக்கும் தக்க தருணத்திற்குக் காத்திருந்தான். அடுத்த ரத யாத்ரையின் போது, இளவரசியை மணக்கோலத்தில் தயார் செய்தான். மன்னன் தங்கத் துடைப்பத்தால் பெருக்கத் துவங்கியவுடன் மந்த்ரி இளவரசியை அருகே அழைத்துப் போய் "மன்னா! இவளுக்கு ஏற்ற தெருப்பெருக்கும் மணமகனைத் தேடினேன். அப்படிப்பட்டவர் நீர் ஒருவரே! எனக்கண்டு கொண்டேன். ஆகவே இவளை இப்போதே ஸ்ரீஜகந்நாதப் பெருமானின் முன் திருமணம் செய்து கொள்ளும்" என்று வேண்டினான். அரசனும் மந்த்ரியின் ஸமயோசித புத்தியைப் பாராட்டி இளவரசியைக் கல்யாணம் செய்து கொண்டான். ஆகவே கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினையும் களையலாம்; கல்யாணமும் செய்யலாம்.

புண்ய தீர்த்தங்கள்

மஹாநதி – (கிழக்கு ஸமுத்ரம்) – கண்ணன் கீதையில் "ஸரஸம் அஸ்மி ஸாகர:" (அதாவது - நீர்நிலைகளுள் நான் கடலாக இருக்கிறேன்) என்கிறார். அதன்படி இங்குள்ள கிழக்குக் கடலே மிக புண்யமான 'சக்ர தீர்த்தம்' என்று கொண்டாடப்படுகிறது. இங்குதான் "தாரு ப்ரஹ்மம்" (மரக்கட்டை வடிவில் வந்த பரம்பொருள்) சக்ர முத்ரையோடு தோன்றினார். க்ருதயுகத்தில் பார்கவி எனும் நதி கடலில் கலக்கும் இவ்விடத்தில்தான் (பாங்கி முஹானா) பங்குனி சுக்ல த்வாதசியன்று தாரு ப்ரஹ்மன் தோன்றினார். கடலில் இவ்விடத்தில்தான் இந்த்ரத்யும்ந மஹாராஜாவும் மஹாராணியும் தாரு ப்ருஹ்மத்தைப் பெற்று, பெருமானின் பிம்பத்தை வடிவமைக்க

வேண்டினர். பாரத தேசத்தின் முக்ய நதிகளான கங்கா, யமுனா, கோதாவரி, காவேரி, தாம்ரபரணி ஆகியவை இக்கடலிலேயே கலக்கின்றன.

இந்த்ரத்யும்ந ஸரோவரம் – இந்த்ரத்யும்ந மன்னன் பகவானை ப்ரதிஷ்டை செய்தபோது ஆயிரம் பசுக்களை தானம் செய்தார். அவற்றின் குளம்புபட்டுப் பள்ளம் ஏற்பட்டு, மன்னன் தானம் கொடுத்த போது விழுந்த தீர்த்தத்தால் அது நிரம்பி இந்தக் குளம் ஏற்பட்டது.

மார்க்கண்டேய ஸரோவரம் – ரிஷியின் வேண்டுகோளின்படி பகவான், தான் ப்ரளயக் கடலின் ஆலிலைத்தளிரில் சயனித்திருப்பதைக் காட்ட, அன்று முதல் இவ்வூரில் ஏற்பட்ட அந்த தீர்த்தத்தின் கரையிலேயே ரிஷி தவம் புரிந்து வந்தார்.

ஶ்வேத கங்கா – இங்கு ஶ்வேத மாதவன் மற்றும் மத்ஸ்ய மூர்த்தியின் கோயில் உள்ளது. இது த்ரேதா யுகத்தில் வாழ்ந்த ஶ்வேத மன்னனால் தோற்றுவிக்கப்பட்டது.

ரோஹிணி குண்டம் – இது கோயிலுக்குள் உள்ளது. கடந்த ப்ரளயத்தின் சிறிதளவு தீர்த்தம் இதில் உள்ளது. அடுத்த ப்ரளயமும் இந்த தீர்த்தத்தில் இருந்தே உருவாகும் எனப்படுகிறது. ப்ரஹ்மா இங்கு வந்தபோது ஒரு காக்கை இதில் விழுந்து நான்கு கைகளோடு விஷ்ணு ஸ்வரூபம் பெற்று முக்தி அடைந்ததைக் கண்டார்.

ஜகந்நாத் புரி திருக்கோயிலின் அமைப்பு

இப்போது இருக்கும் இத்திருக்கோயில் சோட கங்க தேவனால் கட்ட ஆரம்பிக்கப்பட்டு அநங்க பீம தேவனால் ஆங்கில ஆண்டு 1200ல் முடிக்கப்பட்டது. இத்திருக்கோயில் நில மட்டத்திலிருந்து 214 அடி உயரத்தில் நீலாசலம் எனும் மலையில் உள்ளது. 10.7 ஏக்கர் நிலப்பரப்பில் இருபது அடி உயரமுள்ள செவ்வக வடிவில், 15ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, இரண்டு நீண்ட மதிள் சுவர்களால் சூழப்பட்டு உள்ளது. வெளி மதிள் மற்றும் ப்ராகாரத்திற்கு மேகநந்த ப்ராசீரம் (665 x 640 அடி) என்றும் உள் சுற்றுக்கு கூர்ம பேதம் (420 x 315 அடி) என்றும் பெயர்கள்.

திருக்கோயிலின் ப்ரதான கிழக்கு வாசல் ஸிம்ஹ (சிங்கம்) த்வாரம் என்றும், தெற்கு வாசல் அச்வ (குதிரை) த்வாரம், மேற்கு வாசல் வ்யாக்ர (புலி) த்வாரம், வடக்கு வாசல் ஹஸ்தி (யானை) த்வாரம் என்றும் பெயர்களைப் பெற்றுள்ளன. அந்தந்த வாசல்களில் அவ்வவ்வற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கிழக்கு வாசலுக்கு வெளியே 36 அடி உயர அருண ஸ்தம்பம் உள்ளது. 18ம் நூற்றாண்டில் கோனாரக்கிலிருந்து கொண்டு வந்து ப்ரதிஷ்டை செய்யப்பட்ட இதன் உச்சியில் ஸுர்யனின் தேரோட்டியான அருணன் அமர்ந்துள்ளார்.

இக்கோயில் நான்கு பகுதிகளாக உள்ளது.

1. போக மண்டபம் - ஜகந்நாதருக்கு ப்ரஸாதம் கண்டருளப் பண்ணும் மண்டபம் பெரிய மண்டபம் (60x57அடி). இதில் க்ருஷ்ண லீலைகள் அழகான சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன.

2. நட மண்டபம் - ஜகந்நாதரை உகப்பிக்க இசை மற்றும் நாட்டியம் நடக்கும் (70x67 அடி) மண்டபம்.

3. ஜகந்மோஹன மண்டபம் (முக ஶாலா) - இதுதான் பக்தர்கள் நின்று கொண்டு பகவானை தர்சிக்கும் இடம். இதில் கருட ஸ்தம்பம் உள்ளது.

4. விமான மண்டபம் - இதுவே கர்பக்ரஹம். இதில் ரத்ன ஸிம்ஹாஸனத்தில் (16x13x4 அடி) பலதேவர் (6 அடி உயரம் - வெள்ளை நிறம்) ஸுபத்ரா (4 அடி-மஞ்சள் நிறம்) ஜகந்நாதர் (5 அடி கறுப்பு நிறம்) ஸுதர்ஶனர், லக்ஷ்மீ, நீல மாதவர், ஸரஸ்வதி ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். குறிப்பிட்ட நேரத்தில் ரத்ன வேதிகையில் ஏறி இவ்வனைவரையும் வலம் வரலாம்.

திருக்கோயில் பூஜாரிகள் (ஸேவகர்கள்) - சுமார் ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் 36 வகையான கைங்கர்யங்களைச் செய்கின்றனர்.

கோயிலுக்குள் இருக்கும் மற்ற தர்ஶன ஸ்தலங்கள்

பைஶாபஹாரா : கிழக்கு வாசலிலிருந்து உள்ளே ஏறிச் செல்லும் 22 படிகள் பக்தர்களின் பாத தூளிபட்டுப் புனிதமானது. இப்படிக்கட்டு யமதர்மராஜனும் கூட ஸாஷ்டாங்கமாக ப்ரணாமம் செய்யும் பெருமை பெற்றது.

கல்பவடம் : பல நூற்றாண்டுகளாக நம் விருப்பங்களை நிறைவேற்றும் ஆலமரம்.

முக்தி மண்டபம் : வேத விற்பன்னர்கள் கூடி ப்ரஹ்மத்தைப் பற்றி ஆலோசித்து த்யானிக்கும் 16கால் மண்டபம். ப்ரஹ்ம ஸபா என்றும் இது அழைக்கப்படுகிறது.

நரஸிம்ஹர் ஸந்நிதி : முக்தி மண்டபத்துக்கு அருகே உள்ளது.

ஸ்ரீதேவி பூதேவி ஸந்நிதி : இங்கிருக்கும் மூலிகைச் சாற்றினால் வரையப்பெற்ற சித்திரங்களில் அனைத்து ஆழ்வார்கள் மற்றும் பகவத் ராமானுஜர் ஆகியோர் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

கோய்லா மண்டபம் : ஜகந்நாதரின் திருமேனி சுமார் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புது தாருவால் செய்யப்படும். இந்த உத்ஸவத்திற்கு நவ கலேவரம் (புதுத் திருமேனி) என்று பெயர். பழைய திருமேனி இவ்விடத்தில் பூமிக்குக் கீழே எழுந்தருளப் பண்ணப்படும்.

ஆனந்த பஜார் : ஜகந்நாதரின் மஹாப்ரஸாதம் அனைத்தும் விநியோகிக்கப்படும் இது.

கோயிலுக்கு வெளியே இருக்கும் ஸந்நிதிகள்

குண்டிசா மந்திர் : இக்கோயில் ராணி குண்டிசாவின் பெயரில் உள்ளது. படாதாண்டா சாலையின் (க்ராண்ட் ரோட்) ஒரு கோடியில் ஜகந்நாதர் கோயிலும், மறுமுனையில் குண்டிசா மந்திரும் உள்ளது. ஆசியாவிலேயே மிகப்பெரிய சாலை இதுதான். இக்கோயிலில்தான் முதலில் தாரு ப்ரஹ்மத்திலிருந்து ஜகந்நாதர் முதலான விக்ரஹங்கள் செதுக்கப்பட்டன. ஆகவே பகவானின் பிறப்பிடம் இதுவே. இவ்வளாகத்தில்தான் அரசன் ஆயிரம் அஶ்வமேத யாகங்கள்

செய்தார். ரதோத்ஸவத்தின் போது ஜகந்நாதர், பலதேவர், ஸுபத்ரா, ஸுதர்ஶனர் ஆகியோர் இங்குதான் எழுந்தருளியிருப்பர்.

யஜ்ஞ ந்ருஸிம்ஹதேவர் : இப்பெருமான் குண்டிசா மந்திரிலிருந்து இந்த்ரத்யும்ந ஸரோவர் போகும் வழியில் மஹாவேதி எனும் இடத்தில் எழுந்தருளியுள்ளார். இந்த்ரத்யும்ந மன்னன் இவ்வூருக்கு வந்தபோது இவரை முதலில் ப்ரதிஷ்டை செய்து ஆயிரம் அஶ்வமேதயாகம் செய்த பின்பே ஜகந்நாதர் தோன்றினார். இவருடைய திருமுகம் முன்னால் தர்சிக்க சாந்தமாகவும், மற்றொரு புறம் உக்ரமாகவும் இருக்கும்.

அலர்நாத் : இங்கிருந்து சுமார் இருபது மைல் தள்ளி உள்ளது இந்த ஸந்நிதி. ஆலாலநாதன் என்று பெயருடைய இவர் உண்மையில் 'ஆழ்வார் நாதன்'. 'அதாவது ஆழங்கால் பட்டோர்க்கு ஆட்படுபவர்!' ஶ்ரீகேதன் என்பவர் தனது மகனான மது என்னும் சிறுவனிடம் கொதிக்கும் சர்க்கரைப் பொங்கலைத் தந்து அதனை உண்மையான அன்புடன் பெருமானுக்கு அமுது செய்யச் சொல்ல, அச்சிறுவனும் உண்மையாகவே அமுது செய்வித்தார். பொங்கலின் சூடு பட்டு பெருமானின் திருவிரல்கள் சிவந்திருப்பதை இன்றும் காணலாம். இங்கு சைதன்ய மஹாப்ரபு தர்சிக்க வந்தபோது பெருமானின் ஆச்ரித பாரதந்த்ர்யத்தைக் கேட்டு உருகி பூமியில் மயங்கி விழுந்து கிடந்ததன் சுவடை இன்றும் காணலாம்.

ஸாக்ஷி கோபால் : மேற்கே 15மைல் தொலைவில் உள்ள ஸந்நிதி இது. கண்ணனின் பேரன் வஜ்ரநாபரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டவர்கள் இவரும், வ்ருந்தாவனத்தில் இருக்கும் மதன மோஹனரும். இவர் முதலில் புரியில் ப்ரதான கோயிலில்தான் இருந்தார். ஆனால் அனைத்து ப்ரஸாதங்களையும் ஜகந்நாதருக்கு முன்னமேயே உண்டு முடித்துவிடுவார். ஆகையால் இருவருக்கும் லீலா ரஸமாக ஓர் பிணக்கு ஏற்பட்டுப் பின் ஒரு முடிவுக்கு வந்து, அதனால் இவர் ஊருக்கு வெளியே கோயில் கொண்டுள்ளதாக ஐதிஹ்யம். ஒரு அந்தண இளைஞனுக்குப் பெண் கொடுக்க இசைந்த முதியவர் ஒருவர், பின் பண வ்யவஹாரத்தால் மறுக்க, அப்போது தன் பக்தனுக்காக மக்கள் மன்றத்தில் ஸாக்ஷி சொல்லிக் கல்யாணத்தை

நடத்தி வைத்தபடியால் அன்றுமுதல் இவர் ஸாக்ஷி கோபால் என்று அழைக்கப்படுவதாகவும் வரலாறு.

ராமாநுஜ ஸம்பந்தம் : பகவத் ராமாநுஜர் புரி ஜகந்நாதனை தர்சிக்க வந்தபோது இங்கிருக்கும் பூஜை முறை ஆகமத்தின்படி, இல்லாததைக் கண்டு அதனை சரிப்படுத்த எண்ணினார். ஆனால் பல்லாண்டுகளாகத் தொண்டு புரிந்து வரும் பூஜாரிகளை விட்டுக்கொடுக்க மனமில்லாத ஜகந்நாதர், அன்று இரவு துயில் கொண்டிருந்த ராமாநுஜரை அவரே அறியாவண்ணம் ஸ்ரீகூர்மத்தில் கொண்டு போய் விட்டார். விடியற்காலை எழுந்து பார்த்த ராமாநுஜர், தான் வேறு இடத்தில் இருப்பதைக் கண்டு ஜகந்நாதரின் ஆச்ரித பக்ஷபாதத்தை உணர்ந்து பல்லாண்டு பாடினார். இன்றும் புரியில் ராமாநுஜர் தங்கியிருந்த மடம், மற்றும் எம்பார் மடம் ஆகியவை உள்ளன. இம்மடத்தில் இருக்கும் ஸந்யாஸிகளுக்கு இத்திருக்கோயிலில் பரம்பரையாகப் பெறப்பட்ட கைங்கர்யமும் உள்ளது.

ஜகந்நாதரின் மஹாப்ரஸாத மஹிமை : உலகில் ஜகந்நாதருக்கு நைவேத்யம் பண்ணப்பட்ட ப்ரஸாதம் யாருக்கும் கிடைக்காமலே இருந்தது. தினமும் அதனைச் சமைத்து கண்டருளப் பண்ணும் ஸ்ரீமஹாலக்ஷ்மியிடம் நாரதர் தனக்கு ப்ரஸாதம் வேண்டும் என்று வெகுநாட்களாக வேண்டி வந்தார். இறுதியில் ஒருநாள், லக்ஷ்மிதேவி பெருமாளிடம் மன்றாடி, நாரதருக்குச் சிறிதளவு ப்ரஸாதம் பெற்றுக் கொடுத்தாள். அதனை உண்ட நாரதர் ஆநந்தத்தின் எல்லைக்கே சென்று கூத்தாடினார். இதனைக் கண்ட பரமசிவன் தனக்கும் ப்ரஸாதம் வேண்டினார். நல்லவேளையாக ப்ரஸாதம் சிறிது மீந்து இருக்கவே, பெற்று, உண்டு ஆநந்த நர்தனம் ஆட, அதனால் மேருவும் கைலாஸமும் நடுங்கின. உடனே பார்வதி தேவி தனக்கும் ப்ரஸாதம் வேண்டும் எனக் கேட்க, ஆனால் சிறிதும் ப்ரஸாதம் மீதம் இல்லாதபடியால் கோபப்பட்டு, “இன்று சபதம் செய்கிறேன். இனி உலகில் அனைவருக்கும் ஜகந்நாத ப்ரஸாதம் எப்போதும் கிடைக்கும்படி செய்வேன்” என்று சூளுரைத்தாள். அவளது பக்தியை மெச்சிய பகவானும் “புரி ஜகந்நாதத்தில் இனி அன்ன ப்ரஹ்மமாகவே இருப்பேன்” என்று அருளினார். மற்ற க்ஷேத்ரங்களில் பெருமானை தர்சித்தாலோ, த்யானித்தாலோ, வலம் வந்தாலோ, ஸங்கீர்த்தனம்

செய்தாலோதான் புண்யம் கிட்டும்; ஆனால் புரியில் ஜகந்நாத ப்ரஸாதத்தை உண்பதாலேயே பாபங்கள் அனைத்தும் விலகி நன்மைகளே விளையும்.

புரியில் ப்ரஸாதத்தை உண்ண சில முறைகள் உண்டு : பூமியில் அமர்ந்தே உண்ண வேண்டும்; விநியோகம் செய்ய கரண்டி முதலானவைகளை உபயோகப்படுத்தக் கூடாது. இலைகளை உபயோகப்படுத்தலாம்; ஜகந்நாதரை நினைத்துக் கொண்டே உண்ண வேண்டும்; உண்டு முடித்தவுடன் வாய் கொப்பளிக்கும்போது முதல் வாய் தண்ணீரைத் துப்பாமல் விழுங்கவேண்டும்; அடுத்த வாய் நீரினை மண்ணில்தான் துப்ப வேண்டும்; சாப்பிட்ட இடத்தைக் கைகளால்தான் சுத்தம் செய்ய வேண்டும். இத்தனை பெருமை உடைய மஹாப்ரஸாதத்தை எங்கு எப்படிச் சமைக்கிறார்கள் என்று பார்ப்போம்.

திருமடப்பள்ளி மாஹாத்ம்யம் : உலகிலேயே மிகப்பெரிய சமையல் கூடம் இதுவே. கோயிலின் தென்கிழக்கு மூலையில் ஒரு ஏக்கர் பரப்பில் திருமடப்பள்ளி அமைந்துள்ளது. 3x4அளவு கொண்ட 752மண் அடுப்புகள் கொண்டது. விறகுக்கட்டைகள், சட்டிப் பானைகள் தவிர எந்தவிதமான யந்த்ரமோ உலோகமோ கிடையாது. மடப்பள்ளியிலிருந்து சமார் 20 படிக்கட்டுகள் இறங்கினால் இருக்கும் பெரிய கேணியிலிருந்து ராட்டிணம் இல்லாமல் தாம்புக் கயிற்றால் கைகளாலேயே இழுக்கப்பட்ட சுத்தமான தண்ணீரை 30 தொண்டர்கள் இடைவிடாமல் கொண்டு வந்து கொட்டுகிறார்கள். இங்கு மிளகாய், வெங்காயம், பூண்டு, காரட், உருளை, தக்காளி போன்ற நிஷித்தமான பல காய்கறிகள் உபயோகப்படுத்தப் படுவதில்லை. திருமடப்பள்ளியில் சுமார் 400 முக்ய கைங்கர்ய பரர்களும் மேலும் 400 உதவியாளர்களும் உள்ளனர். காய்கறி திருத்தவும், தேங்காய் திருகவும் சுமார் 100 பேர் உள்ளனர். வேற்று மனிதர் யாருக்கும் ப்ரவேச அநுமதி இல்லை. பொதுவாக ஒரு நாளைக்கு 72 குவிண்டல் (சுமார் 500 படி) ப்ரஸாதமும், விசேஷ நாட்களில் 900 குவிண்டல் (சுமார் 6000படி) ப்ரஸாதமும் சமைக்கப்படுகின்றன. அனைத்து ப்ரஸாதங்களும் பானைகளில்

ஏற்றப்பட்டு, சிறு உறிகளில் கட்டி, மூங்கில் கம்புகளின் இருபுறமும் தொங்கவிட்டுக் கொண்டு கைங்கர்யபரர்கள் தோளில் சுமந்து போய் பெருமான் முன்னே அவை படைக்கப்படுகின்றன. இத்தொண்டை சுமார் 60 பேர் செய்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் 56 வகையான ப்ரஸாதங்கள் (சப்பன் போக்) செய்யப்படுகின்றன. அவை 9 வகையான சித்ரான்னம், 14 வகைக் கறியமுது மற்றும் கூட்டு, 9 வகை பால் பாயஸம், 11 வகை இனிப்புகள், 13 வகையான திருப்பணியாரங்கள். போகத்தின் பெயர்கள் மற்றும் நேரம்:

காலை 8 மணி	:	கோபால் வல்லப போகம்
காலை 10 மணி	:	ஸகல போகம்
பகல் 11 மணி	:	போக மண்டப விநியோக போகம்
மதியம் 12.30 மணி	:	மத்யாஹ்ந போகம்
மாலை 7 மணி	:	ஶயன போகம்
இரவு 11.15 மணி	:	மஹாஶ்ருங்கார போகம்

தினம் நிகழும் கொடியேற்றம் – ஜகந்நாதரின் விமான கோபுரம் 214 அடி உயரம். அதன்மேல் நீல சக்ரம் என்று பெயர் பெற்ற ஸுதர்சன சக்ரம் பொருத்தப்பட்டுள்ளது. எட்டு உலோகங்களால் செய்யப்பட்ட இது 36 அடி சுற்றளவு உள்ளது. இதன் மேல் சிகப்பு, வெள்ளை, மஞ்சள் ஆகிய நிறம் கொண்ட கொடிகள் தினமும் மாலை 6.30 மணி அளவில் ஏற்றப்படுகின்றன. கருட சேவகர்கள் என்று அழைக்கப்படும் தொண்டர்களில் ஒருவர், பரம்பரையாக தினமும், அனைத்துக் கொடிகளையும் சுமந்து கொண்டு இக்கோபுரத்தின் 214 அடி உயரத்தையும் 15 நிமிடங்களில் எந்த யந்த்ரத்தின் உதவியும் இல்லாமல் சரசரவென ஏறி அடுத்த 10 நிமிடங்களில் கொடிகளைக் கட்டுகிறார். கனத்த மழை, சூறாவளி அடித்தாலும் கொடி கட்டப்படும். இப்பரம்பரையில் வந்தவர்களுக்கு கருட பகவானின் அருளால் 8வயது முதலே இத்தொண்டில் பழக்கம் ஏற்படுகிறது.

நவ கலேவர (புது திருமேனி) உத்ஸவம் : ஜகந்நாதர், பலதேவர், ஸுபத்ரா, ஸுதர்சனர் ஆகியோரின் திருமேனி சில ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட்டு புது தாருவால் செய்யப்படும். எந்த ஆண்டில்

அதிக மாஸமாய் ஆனி மாதத்தில் இரண்டு பௌர்ணமிகள் வருமோ அந்த ஆண்டு, இவ்வுத்ஸவத்திற்கென்றே நியமனம் பெற்று இருக்கும் பூஜாரிகள் சுமார் 40மைல் தூரத்தில் ப்ராசீ நதிக்கரையில் இருக்கும் காகாத்புர் எனும் ஊரின் காடுகளில் தகுந்த வேப்ப மரங்களைத் தேடுவர். சில விசேஷ அடையாளங்களோடு இருக்கும் ஒரு மரத்தை எடுத்து வந்து பூசித்து, அதடின கோய்லா வைகுண்டத்தில் இருக்கும் மண்டபத்தில் தச்சர்கள் பகவானின் திருவுருவங்களாகச் செதுக்குவர். புதுத் திருமேனிகள் உருவானவுடன், அமாவாஸை இரவு அவர்களை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து கர்பக்ருஹத்தில் உள்ள பழைய திருமேனிகளுக்கு அருகே வைப்பர். (அன்று ஊர் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்படும்). பூஜாரிகளுள் மூத்தவர் கண்களைக் கட்டிக் கொண்டு, கைகளிலும் துணி சுற்றிக் கொள்வார். பின் பழைய மற்றும் புதுத் திருமேனிகளுக்கு இடையே நின்று கொண்டு, பழைய திருமேனியின் நாபியில் இருக்கும் ப்ரஹ்மபதார்த்தத்தை எடுத்து புதுத் திருமேனியில் பொருத்துவார். பின் பழைய திருமேனிகள் கோய்லா வைகுண்டத்தில் பூமிக்குக் கீழே எழுந்தருளப் பண்ணப்படுவர். சுமார் நான்கு மாதங்கள் நடக்கும் இவ்வுத்ஸவம் முழுதும் பரம ரஹஸ்யமாக நடத்தப்படும். பழைய திருமேனிக்காக, தாயாதிகள் (துயிதர்கள்) எனும் வர்கத்தினர் 13 நாள்கள் துக்கம் அநுஷ்ட்டிப்பர். கடந்த நவகலேவர உத்ஸவம் நடந்த சில ஆண்டுகள் 1912, 1931, 1950, 1969, 1977, 1977, 1996 ஆகியவை.

ஜகம் புகழும் ரத யாத்ரை : ராணி குண்டிசாவின் வேண்டுகோளுக்கு இணங்க பல்லாயிரம் ஆண்டுகளாக மூன்று மூர்த்திகளும் மூன்று தேர்களில் தங்கள் கோயில்களிலிருந்து புறப்பட்டு, 2 மைல்கள் உள்ள க்ராண்ட் வீதியில் பவனி வந்து குண்டிசா மந்திர் அடைவர். ஆனி மாதம் பௌர்ணமியில் (ஸ்நான பூர்ணிமா) தொடங்கி ஆடி மாதம் சுக்ல சதுர்தசியன்று (நீலாத்ரிபிஜே) முடியும் இத்தேர்திருவிழாவை தர்சிக்க உலகமெங்கும் இருந்து பல லக்ஷம் மக்கள் திரண்டு வருவர். ரத யாத்ரா, குண்டிசா யாத்ரா, கோஷா யாத்ரா என்று அழைக்கப்படும் இவ்விழா, 10வயதுக் கண்ணன் கோகுலத்திலிருந்து தன் பிறந்த ஊரான மதுராவிற்கு வந்ததை நினைவு கூர்கிறது. ஆகவேதான் ஜகந்நாதர் தன் பிறந்தகமான குண்டிசாவிற்குச் செல்கிறார்.

தேர்களின் அமைப்பு : மூன்று தேர்களுமே முழுவதும் மரத்தால், கைகளாலேயே செய்யப்பட்டவை. ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன் புதியதாகவே 125 தச்சர்கள் 2188 மரத்துண்டுகளை இணைத்து இத்தேர்களைச் செய்வர். ஜகந்நாதரின் தேரின் பெயர் நந்தி கோஷ், 7அடி உயரமுள்ள 16 சக்ரங்கள் (கலைகள்) பொருத்தப்பட்ட இதன் உயரம் 45 அடி. தேர்ச்சீலைகளின் வர்ணம் மஞ்சள். சங்கிகா, ரேசிகா, மோசிகா மற்றும் த்வாலினி எனும் பெயருடைய நான்கு குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். இதற்கு தாருகன் தேரோட்டி; சங்கசூடன் தேர்க்கயிறாக (250அடி நீளம்) உள்ளான்.

பலராமரின் தேரின் பெயர் தாலத்வஜம். 14 சக்கரங்கள் (மன்வந்தரங்கள்) பொருத்தப்பட்ட இதன் உயரம் 44 அடி. தேர்ச்சீலைகளின் வர்ணம் நீலம். ருக், யஜுஸ், ஸாம மற்றும் அதர்வணம் எனும் பெயருடைய நான்கு குதிரைகள்; மாதலி தேரோட்டி; வாஸுகி தேர்க்கயிறு.

ஸுபத்ராவின் தேரின் பெயர் பத்மத்வஜம்/தேவதாலனம். ஓராண்டின் பன்னிரெண்டு மாதங்களைக் குறிக்கும் வண்ணம் 12 சக்கரங்கள் பொருத்தப்பட்ட இதன் உயரம் 43 அடி. தேர்ச்சீலைகளின் வர்ணம் சிவப்பு. ப்ரஜ்ஞா, அநுபா, கோஷா, மற்றும் அக்ரி என்று பெயருடைய நான்கு குதிரைகள்; அர்ஜுனன் தேரோட்டி; ஸ்வர்ணசூடன் தேர்க்கயிறு. இத்தேரில்தான் ஸுதர்சனர் எழுந்தருளியிருப்பார்.

விழாவின் முக்யமான நாட்கள் : ஆனி பௌர்ணமி – ஸ்நான யாத்ரா – தாரு ப்ரஹ்மத்திலிருந்து ஜகந்நாதர் தோன்றிய நாள். இன்று பகவானை 108 குடம் பன்னீரால் நீராட்டுவர். ஆகையால் அவருக்கு ஜலதோஷம் பிடித்து அடுத்த பதினைந்து நாள்கள் தனிமையில் இருப்பதாக பக்தர்களின் நம்பிக்கை . அதனால் அந்நாள்களில் தர்ஸனம் கிடையாது.

ஆனி சுக்ல த்விதீயை – முதலில் பலராமர் அடுத்து ஸுபத்ரா கடைசியாக ஜகந்நாதர் சிறந்த அலங்காரத்தோடு ஒவ்வொருவராக நகர்ந்து நகர்ந்து வெளியே வந்து தேரில் எழுந்தருளுவர். அரசன்

தங்கத் துடைப்பத்தால் பெருக்கியவுடன் தேர்கள் புறப்பட்டு மாலையில் குண்டிசா மந்திர் சென்றடையும். மூர்த்திகள் உள்ளே சென்று அடுத்த ஒன்பது நாள்கள் இங்கேயே எழுந்தருளியிருப்பர். அனைத்து ப்ரஸாதங்களும் இங்கேயே தளிகை பண்ணப்படும்.

ஆனி சுக்ல பஞ்சமி - ஹேரா பஞ்சமி - தன்னை விட்டுச் சென்றதற்காகக் கோபம் கொண்ட லக்ஷ்மீ ப்ரதான கோயிலிலிருந்து பல்லக்கில் குண்டிசா மந்திர் வந்து ஜகந்நாதர் தேரின் ஒரு சிறு பகுதியை உடைப்பதாக ஒரு லீலா ரஸமும் உண்டு.

ஆனி சுக்ல தசமி - உல்டா ரதம் - மூர்த்திகள் அனைவரும் திரும்ப எழுந்தருள்வர். லக்ஷ்மியின் கோபத்தால் (ப்ரணய கலஹமாகிற மட்டையடி உத்ஸவம்) ப்ரதான கோயில் மூடப்பட்டு பெருமாள் வாசலிலேயே காத்திருப்பார்.

ஆனி சுக்ல ஏகாதசி - ஸுனா வேஷ தர்ஶனம் - இன்றிரவு பல கிலோக்கள் ஸ்வர்ண திருவாபரணங்களை மூர்த்திகள் அணிவர். இதை தர்சிக்க ஒரிய மாநிலத்தின் மூலை முடுக்குகளிலிருந்து மக்கள் வெள்ளமெனப் பெருகி வருவர்.

ஆனி சுக்ல த்வாதசி - இன்றிரவு பெருமான் உள்ளே எழுந்தருள்வார். வீதியில் தேரில் இருக்கும்போது மட்டும் பக்தர்கள் அனைவரும் தேரில் ஏறி பெருமானைத் தொட்டு தர்சிக்கலாம்.

இன்னமும், ஜகம் புகழும் ஜகந்நாதன் உறையும் புரி க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யத்தை சொல்லிக் கொண்டே போகலாம். ஆயின் அறிவின் வரையறைக்குட்பட்டு இத்துடன் நிற்கிறேன். அனைத்துக்கும் மேலாக, அவனருளையே நாடி நாம் அனைவரும் முழங்கிடுவோம்.

"ஜய் ஜகந்நாத்! புரி புருஷோத்தம் தாம் கீ - ஜய்!"

நீலாசல நிவாஸாய நித்யாய பரமாத்மநே ।
ஸுப$_4$த்$_3$ரா ப்ராணநாதா$_2$ய ஜகந்நாதா$_2$ய மங்களம் ॥

ஸ்ரீ:

ப₄த்₃ராசலம்

அயோத்₄யையை ஆண்ட த₃ஶரத₂னின் ஆணைப்படி ஸ்ரீராமன் ஸீதையுடனும், இலக்குவனுடனும் காட்டுக்குப் புறப்பட்டான். நாடே துயரத்தில் ஆழ்ந்தது. அப்பிரிவைத்தான் தே₃வர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது எளியோரைக் காப்பதற்காக ப₄க₃வான் செய்த லீலையாகும். இந்தப் பிரிவே ஸ்ரீராமபிரான் தன் திருவடிபடும்படி பாரதநாடு முழுவதும் நடப்பதற்கும் காரணமாயிற்று. ப₄த்ராசலம் போன்ற பல க்ஷேத்ரங்கள் உருவாகவும் காரணமாயிற்று. பல்வேறு நதிகள் காடுகளைக் கடந்து த₃ண்ட₃காரண்யம் அடைந்தார் ஸ்ரீராமன். அகஸ்த்யர், ஶரப₄ங்கர், ஸுதீக்ஷ்ணர், மதங்கர் போன்ற ரிஷிகள் நிறைந்த த₃ண்ட₃காரண்யத்தில்தான் க₂ரன், தூ₃ஷணன், த்ரிஶிரஸ் போன்ற ராக்ஷஸர்களும் இருந்தார்கள். எனவே அவர்களின் தவத்துக்கு மிகுந்த இடைஞ்சல் உண்டாயிற்று. தம்மை ஸேவித்த ராமபிரானுக்கு தி₃வ்யமான வைஷ்ணவவில், அஸ்த்ரம் (மந்த்ரத்தால் புனிதப்படுத்தப்பட்ட பா₃ணம்) ஆகியவற்றைப் பரிசாக வழங்கினார் அகஸ்த்யர். இயற்கையழகால் சூழப்பட்டு கோ₃தா₃வரீ சலசலத்து ஓடும் பஞ்சவடியில் ஸ்ரீராமபிரான் தங்குவதற்கு அகஸ்த்யர் வழி காட்டினார்.

ஸூர்ய ஒளியைக் கண்டிராத ஸீதை அயோத்₄யையிலிருந்து இவ்வளவு தூரம் கடந்து வந்ததால் இளைப்பார வேண்டியிருந்தது.

அதை அறிந்து கொண்ட ராமபிரான் ஒரு சரியான இடத்தைத் தேடும்போது, ஓர் சிறிய குன்று நன்றாக விரிந்து இளைப்பார ஏற்றதாகவிருந்தது. மனமுவந்த ஸ்ரீராமபிரான் இந்தக் குன்று அடுத்த ஜந்மத்தில் தன் ப₄க்தனாகப் பிறந்து உலகில் விஷ்ணுப₄க்திக்கு எடுத்தக்காட்டாக விளங்குவான் என்று ஆசீர்வதித்தார். அந்தக் குன்றே ராமப₄த்₃ரனின் அருளால் ப₄த்₃ர மஹர்ஷியாய் மேருமலைக்கும்-மேருதே₃விக்கும் மகனாய்ப் பிறந்தார். சிறுவயது முதலே ப்ரஹ்லாத₃ன், த்₄ருவன் போன்று விஷ்ணுப₄க்தியில் ஆழ்ந்திருந்த ப₄த்₃ரனுக்கு நாரதர் ஸ்ரீராமதாரக மந்த்ரத்தை உபதே₃ஶித்தார். நாரத₃ரின் மூலமாகத் தன்னுடைய

முற்பிறவியின் ரஹஸ்யத்தையறிந்த ப$_4$த்$_3$ரன் தாய்தந்தையரின் ஆசியோடு ப$_4$க$_3$வானை நோக்கித் தவம் செய்வதற்காக த$_3$ண்ட$_3$காரண்யத்துக்குப் புறப்பட்டான். அங்கே புனிதமான கெ$_3$ளதமி நதிக்கரையையடைந்து தவம் புரியத் தொடங்கினான். ப$_4$த்$_3$ரனின் தவ வலிமை தாங்காத இந்த்$_3$ராதி$_3$தே$_3$வர்கள் பிரமனிடம் முறையிட்டனர். அனைவரும் பாற்கடலுக்குச் சென்று ப$_4$க$_3$வானை வேண்டினார்கள். எம்பெருமானும் கஜேந்த்$_3$ரனை ரக்ஷிப்பதற்கு எந்த வேக$_3$த்துடன் இறங்கினாரோ அதே வேக$_3$த்துடன் இப்பொழுதும் ப$_4$த்$_3$ரனுக்கு ஸேவை ஸாதி$_4$ப்பதற்காக இறங்கினார். அவரைத் தொடர்ந்து பிராட்டி, கருட$_3$ன், ஆதிஶேஷன், விஷ்வக்ஸேநர், நாரத$_3$ர் முதலான ரிஷிகள் இறங்கினர்.

இதையறிந்த அனுமனும் அவரை வரவேற்பதற்கு க$_3$ந்த$_4$மாத$_3$ந மலையிலிருந்து விரைந்தார். ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியுடன் இதுவரையாரும் ஸேவித்திராத திருக்கோலத்தில் பாஞ்சஜந்யம், மேல் இடது கரத்தில் ஸ்ரீஸுத$_3$ர்ஶந சக்கரம், கீழ் இடது கரத்தில் வில், கீழ் வலது கரத்தில் அப$_4$ய ஹஸ்தத்துடன் கூடிய அம்புடன் ஸேவை ஸாதி$_4$த்ததை அனைவரும் ஸேவித்து 'வைகுண்ட$_2$ராமன்' என்று போற்றிப் பாராட்டினர். பிராட்டி ஸீதையாக ஆதிஶேஷன், வில் மற்றும் அம்புகளுடன் லக்ஷ்மணனாகச் சேர, அனைவரும் 'வைகுண்ட$_2$ராமன்' என்றும், 'ஸ்ரீராமநாராயணன்' என்றும், அகார உகார மகாரங்களுக்கு வாச்யர்களான பெருமாளும் பிராட்டியும் ஆதி$_3$ஶேஷனும் ஒருசேர ஸேவை ஸாதி$_4$த்தபடியால் 'ஓங்காரராமன்' என்றும் போற்றினர். இதே திருக்கோலத்தில் ப$_4$த்$_3$ரனுக்கு ஸேவை ஸாதி$_4$த்தார். இடது தொடைமேல் வீற்றிருந்த பிராட்டியுடனும் இலக்குவனுடனும் ஸேவை ஸாதி$_4$த்த ஸ்ரீராமனின் திருவடியைத் தன் தலைமேல் தாங்கவேணும் என்று ப்ரார்த்தி$_2$த்தார். இந்த ஸேவை எல்லாருக்கும் கிடைக்க வேணும் என்றும் தானும் ப$_4$க$_3$வானைத் தாங்கும் மலையாக இருக்க வேணும் என்றும் வேண்டினார். இப்படியாக ப$_4$த்$_3$ரன் ப$_4$த்$_3$ராசலமாக உருவெடுத்தார்.

இப்படி அவதரித்த ப$_4$க$_3$வானுக்கு முதன் முதலில் பாஞ்சராத்ர ஆக$_3$மப்படி நாரத$_3$ர் திருவாராத$_4$நம் செய்தார். நடந்தவற்றை அறிந்து கொண்ட மேருதம்பதிகள் தம் குமாரனான ப$_4$த்$_3$ரன் மலையாகி ப$_4$க$_3$வானைத் தாங்குவதை வந்து ஸேவித்து ஆநந்த$_3$மடைந்தனர். தே$_3$வசிற்பி விச்வகர்மா ஆலயத்தைத் தங்கமயமாகக் கட்டிமுடித்தார். நாரத$_3$ரும் நித்யதிருவாராத$_4$நம் செய்து கொண்டிருந்தார். இவையாவும் த்$_3$வாபரயுக$_3$த்தில் நடந்தன.

த்$_3$வாரபரயுக$_3$ம் முடிந்து கலியுக$_3$ம் ஆரம்பித்த வேளையில் ப$_4$த்$_3$ரன் ப$_4$க$_3$வானிடம், "கலியின் கொடுமையால் மக்கள் துன்பத்துக்கு ஆளாவர்கள்; அவர்களுக்குக் கலியின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்து ஸேவை ஸாதி$_4$க்க வேணும்" என்று ப்ரார்த்தி$_2$த்தார். காலப்போக்கில் தே$_3$வர்களால் கட்டப்பட்ட திருக்கோயில் மறைந்து போயிற்று. அவ்விடத்தில் மற்றொரு திருக்கோயில் தோன்றியது. மஹர்ஷிகளாலும் அரசர்களாலும் அத்திருக்கோயிலில் உள்ள ராமபிரான் ஆராதி$_4$க்கப்பட்டு வந்தார். திருமங்கையாழ்வாரும் இப்பெருமானை ஸேவித்ததாகச் சான்று உள்ளது. ஆகையால் பெரியதிருமொழியிலிருந்து இன்றும் சில பாசுரங்கள் இங்கு ஸேவிக்கப்பட்டுவருகின்றன.

மீண்டும் ப$_4$த்ராசலத்திருக்கோயில் மறைந்தது. பதினேழாம் நூற்றாண்டில் இவ்விடத்துக்கு அருகில் 'போகல த$_3$ம்மக்க' என்னும் பெண் வஸித்து வந்தாள். மலைஜாதியைச் சேர்ந்த இவளுக்கு ப$_4$த்ராசலராமன் கனவில் ஸேவை ஸாதி$_4$த்து 'நான் அருகில் இருக்கிறேன்' என்றான். இரண்டு நாட்கள் தேடியும் அவளுக்கு ப$_4$த்ராசலராமன் கிடைக்கவில்லை. மீண்டும் அவள் கனவில் தோன்றி, தானிருக்கும் இடத்தைக் காட்டினார். அவள் அடுத்தநாள் மலையேறி ஒரு புற்றுக்குள் எம்பெருமான் இருப்பதையறிந்து அவரை வெளியே எடுத்து கோ$_3$தா$_3$வரீ தீர்த்த$_2$த்தால் திருமஞ்ஜனம் செய்வித்தாள். ஸ்ரீராமபிரான் வெளியே எழுந்தருளினார். வேடுவச்சியான த$_3$ம்மக்கா பனை ஓலைகளால் ஆன ஒரு மேற்கூரை அமைத்து அதற்குள் பெருமானை எழுந்தருளப் பண்ணினாள்.

தனக்குக் கிடைக்கும் காய்கனிகளை அவருக்கு ஸமர்ப்பித்து அங்கேயே வஸித்து வந்தாள்.

அக்காலத்தில் 'தானிஷா' என்ற பெயருடைய ஒரு துருஷ்கராஜாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது இந்த இடம். அவருக்கு முக்$_2$யமந்திரிகளாக அக்கண்ணா, மாதண்ணா என்ற இருவர் இருந்தனர். அந்த இருவருக்கும் உறவினர் 'கஞ்செர்ல கோபண்ணா' என்பவர். அவரை இந்த இடத்துக்கு வரி வசூலிப்பதற்காக நியமித்தான் ராஜா. க்$_3$ராமத்துக்கு வந்த கோபண்ணா விஷயத்தைக் கேட்டறிந்து மலைமேல் வீற்றிருக்கும் ராமபிரானை ஸேவிப்பதற்கு விரைந்தார். வந்த அதி$_4$காரியைப் பார்த்த மூதாட்டியான த$_3$ம்மக்கா, "ராமபிரான் இப்படி வெயிலிலும் மழையிலும் இருப்பது சரியன்று; உடனே திருக்கோயில் கட்ட வேணும்" என்று வேண்டினாள். ராமப$_4$க்தரான கே$_3$ாபண்ணாவும் ஸ்ரீராமபிரானை ஸேவித்து மெய்மறந்து 'தாசரதி ஶதகம்' என்ற நூலை இங்கேயே இயற்றிக் கோயிலும் கட்ட இசைந்தார். தம்முடைய ஆசார்யரான ஸ்ரீரகு$_4$நாத$_2$பட்டரை வரவழைத்தார். ப்$_3$ரஹ்மபுராணத்தில் கௌ$_3$தமீமாஹாத்ம்ய க$_2$ண்ட$_3$த்தில் ப$_4$த்ராசலமாஹாத்ம்யம் கண்டறியப்பட்டது. இந்தப் பெருமாள் ஸ்வயம் வ்யக்தர் என்றும் இந்த மலைதான் 'ப$_4$த்$_3$ரன்' என்றும் தெரிந்து கொண்டு இதற்கு ப$_4$த்$_3$ராசலமென்று பெயரிட்டார். எம்பெருமானை 'ப$_4$த்ர$_3$ாத்$_3$ரிராமன்' என்றும் 'ப$_4$த்$_3$ராத்$_3$ரிநாத$_2$ன்' என்றும் கொண்டாடினார். திருக்கோயிலின் நிர்மாணம் கே$_3$ாபண்ணாவின் தலைமையில் வேக$_3$மாக நடைபெற்றது. பெருமானுக்கு வேண்டிய திருவாப$_4$ரணங்கள் ஸித்$_3$த$_4$மாயின. ராஜகே$_3$ாபுரங்கள், ப்ராகாரங்கள் கட்டி முடிக்கப்பட்டு ஆலயப்ரதிஷ்டை$_2$க்கு நாள் குறித்தாகிவிட்டது. நித்யப்படி திருவாராத$_4$நத்துக்கு மட்டுமின்றி நாமஸங்கீர்த்தநத்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருவரங்கத்திலிருந்து ஐந்து பாஞ்சராத்ர ஆக$_3$ம வித்$_3$வான்கள் எம்பெருமானின் நித்யப்படி திருவாராத$_4$நத்துக்காக வரவழைக்கப்பட்டார்கள். விசித்ரமான ப$_4$க$_3$வத்ஸங்கல்பத்தால் ஆலயத்தின்மேல் வைக்கப்படவேண்டிய ஸ்ரீஸுத$_3$ர்ஶநசக்ரம் காணாமல் போயிற்று. கோபண்ணா தம்மேல்

தான் குற்றம் என்று தீர்மானித்து கோ3தா3வரி நதியில் விழுந்து தற்கொலைக்கு முயன்றார். நதியில் விழுந்தவர் தலையில் ஏதோவொரு வஸ்துபட, பார்த்த கோ3பண்ணா அதை ஸ்ரீ ஸுதர்ஸந சக்ரம் என்று அறிந்து கொண்டார். யாரோவொருவர் தம்மைக் கரைக்கு இழுத்துச் செல்வதையும் உணர்ந்தார். கரையில் ஒதுங்கிய கோ3பண்ணாவைக் கண்டு யாவரும் வியந்து அவரை 'ராமதாஸர்' என்று போற்றினார்கள். அன்று முதல் கோ3பண்ணா, ப4க்தராமதா3ஸராகவே புகழ் பெற்றார். ஆலயஸம்ப்ரோக்ஷணம் இனிதே நிறைவேறியது. ப4க்தர்கள் தி3னமும் பெருந்திரளாக வந்து ப4க3வானை ஸேவித்தார்கள். தி3னமும் எம்பெருமானின் ப்ரஸாத3மாக அன்னதா3நம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பாடல்களை ராமதா3ஸர் ஸ்ரீராமபிரானின் மேல் இயற்றினார். ஸ்ரீராமபிரானின் கு3ணங்களை விளக்கும் இவற்றில் நாமஸங்கீர்த்தநமஹிமை, ஶரணாக3திதத்த்வம், தாயாரின் பெருமை, அடியார்களின் பெருமை ஆகியவையும் உள்ளன.

ஒரு நாள் திடீரென்று ராமதாஸரின் மகன் குளத்தில் தவறி விழுந்ததில் உயிர் பிரிந்தது. அறிந்த ராமதா3ஸர் கோயிலிருந்து ஓடி வந்து ராமபிரானை ப்ரார்த்தித்தார். ராமபிரானுடைய அப4யஹஸ்தம் ஆகாயத்தில் தோன்றியது. அதிலிருந்து ஒளிக்கற்றையொன்று குழந்தையின்மேல்பட்டது. குழந்தை உயிர்பெற்று எழுந்தது. ராமதாஸரின் புகழ் மேலும் பரவியது.

இதையறிந்த சில விஷமிகள் தானீஷா நவாபிடம் புறம் கூறினார்கள். ராமதா3ஸரைச் சிறைப்பிடித்து அரண்மனைக்கு வரவழைத்தான் நவாப். அவரும் மன்னரின் ஆணைப்படி அரசவைக்கு வந்து திருக்கோயில் முழுவதும் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட பணத்தால் கட்டப்பட்டது என்றும், தாம் செலுத்த வேண்டிய வரியை இன்னும் சிறிது காலத்தில் கட்டுவேன் என்றும் சொன்னார். அதற்குச் செவிசாய்க்காத நவாப் அவருக்குப் பன்னிரண்டு வருடம் சிறைவாஸம் விதித்தான். கடி2னமான தண்ட3னைகளை அனுப4வித்துக் கொண்டு சிறையிலிருந்தபோதும் பெருமாளையும், பிராட்டியையும் குறித்தே பாடினார். ப4த்3ராசலத்தில் நடக்கும்

ஸ்ரீராமபிரானின் நித்யோத்ஸவங்களை சிறையிலிருந்துகொண்டு மனஸ்ஸாலேயே அனுப$_4$வித்தார்.

ஒருநாள் இரவு ஓர் அற்புதம் நடந்தது. ஸ்ரீராமபிரானும் இலக்குவனும் காவலாளிகள் வேடத்தில் தானீஷாவின் கோட்டைக்கு வந்து ராமத$_3$ாஸர் திருக்கோயில் கட்டுவதற்குச் செலவழித்த ஆறுலட்சம் வெள்ளிக்காசுகளுக்காக அந்த அளவுக்கான தங்கக்காசுகளைக் கொடுத்தார்கள். அதில் ஒவ்வொரு காசிலும் ப$_4$த்$_3$ராசலராமனின் திருவுருவம் பொறிக்கப்பட்டிருந்தது. இன்றும் அந்தக் காசுகளில் இரண்டு காசுகள் இருக்கின்றன. அவர்கள், தங்களது பெயர் ராமோஜி, லக்ஷ்மோஜி என்று கூறி "உடனே ராமத$_3$ாஸரை விடுதலை செய்யவேணும்" என ஆணையிட்டனர். நாணயங்களைப் பார்த்த நவாப் அதில் ராமபிரானின் உருவத்தைப் பார்த்து ராமத$_3$ாஸரின் ப$_4$க்தியை உணர்ந்து அவரை விடுவித்து அவரிடம் மன்னிப்பு வேண்டினான். "ப$_4$த்$_3$ராசலம் முதலிய இடங்கள் இனி உங்கள் வசமாகட்டும், அவற்றுக்கு இனி நீங்கள் கப்பம் கட்டத்தேவையில்லை" என்றும் கூறினான்.

ஆசுகவியான ராமத$_3$ாஸர் இருபத்துநாலு (24) எழுத்துக்கள் கொண்ட க$_3$ாயத்ரிமந்த்ரத்தைப்போல் இருபத்து நாலாயிரம் (24,000) ஶ்லோகங்கள் கொண்ட ஸ்ரீராமாயணத்தை இருபத்துநாலு (24) ச்லோகங்களில் சுருக்கமாகப்பாடினார்.

தமது இறுதிக்காலம் வரை ப$_4$த்$_3$ராசலராமனுக்குக் கைங்கர்யம் செய்து பரமபுருஷனுடைய திருவடியையடைந்தார் ராமத$_3$ாஸர்.

ப$_4$த்ராசல க்ஷேத்ர மாஹாத்ம்யம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீஅஹோபிலம்

அஹோ வீர்யம் அஹோஸௌர்யம் அஹோபா$_{3}$ஹுபராக்ரம: ।
நாரஸிம்ஹம் பரம் தை$_{3}$வம் அஹோப$_{3}$லம் அஹோப$_{3}$லம் ॥

எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களது மங்களாசாஸனம் பெற்ற நூற்றெட்டு திவ்யதேசங்களில், ஆந்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள நரஸிம்ஹ க்ஷேத்ரமான ஸ்ரீ அஹோபிலம் திருமங்கையாழ்வாரது பெரிய திருமொழி முதற்பத்து-ஏழாம் திருமொழிப் பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்று 'திருச்சிங்கவேள் குன்றம்' என்று போற்றப்படுகிறது.

பகவானது திருவவதாரங்கள் பலவற்றில் நரஸிம்ஹ அவதாரத்திற்கு ஒப்பற்றதோர் தனிச்சிறப்பு உண்டு. ஒரே சமயத்தில் மனித உருவையும் சிங்க உருவையும் இணைத்துக்காட்டியதுபோல், தனது ஸர்வாந்தர்யாமித்வத்தையும், ஸர்வ வ்யாபகத் தன்மையையும் இவ்வவதாரத்தில் ஒரு சேரக்காட்டியருளினான் எம்பெருமான். ஒரே சமயத்தில் பக்தனான ப்ரஹ்லாதன் மீது கருணைப்பார்வையினைப் பொழிந்தும், அசுர வேந்தனான இரணியனைத் தன் உக்கிரமான பார்வை ஒன்றாலேயே உருக்குலைய வைத்ததும் இந்த அவதாரத்தில் தான்!

நல்லோரை நலியும் தீயோரை அழித்தொழிக்க வெளிப்படுத்திய அளப்பரிய ஆற்றல்! பக்தனான ஒரு பாலகன் தன் கையால் காட்டிய இடத்திலிருந்தும் விரைந்து வந்து காத்தருளும் பேரன்பு! எங்கும் நிறைந்து உறையும் தன்மை! 'அக$_{4}$டித க$_{4}$டனா ஸாமர்த்யம்' எனப்படும் சேராதவற்றையும் சேர்த்துவைக்கும் திறல்! இது போன்ற தன் மஹிமைகள் பலவற்றைப் பிரகடனப்படுத்திய சிங்கப்பிரானின் சீர்மை குறித்து நம்மாழ்வார், 'எங்கும் நாடி நாடி, நரசிங்கா!' என்றழைத்து உருகுகிறார். 'ஸத்யம் வித$_{4}$ாதும் நிஜப்$_{4}$ருத்ய ப$_{4}$ாஷிதம்' என்று ஸ்ரீஸுகரும் ஸ்ரீமத் பாகவதத்தில் இந்த வைபவத்தைக் கொண்டாடுகிறார்.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் 'நாரஸிம்ஹ வபு: ஸ்ரீமான்' என்ற திருநாமம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை அழகியசிங்கப் பெருமாளாக எடுத்துக் காட்டுகிறது. இதனையே திருமழிசைப்பிரானும், 'அழகியான்தானே! அரியுருவன்தானே!' என்று அறுதியிடுகிறார். வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன் கோதையும் 'கோளரி மாதவன்' என்றும் 'அரிமுகன் அச்சுதன்' என்றும் கல்யாணக் கனவில் தான் கண்ட கண்ணனின் அழகை சிங்கத்திருவுருவுடன் சேர்த்து அனுபவிக்கிறாள்.

ஸ்ரீ ருக்மிணிப் பிராட்டியாரும் கண்ணுக்கு அனுப்பிய தன் சரணாகதிக் கடிதத்தில் 'காலே ந்ருஸிம்ஹ!' என்றழைத்து, "பக்தனுக்காக சடக்கென நரசிங்கமாய்த் தோன்றிக் காத்தருளியது போல என்னையும் காலம் தாழ்த்தாது கடிதோடிவந்து கைக்கொள்ளவேணும்!" என்று பிரார்த்திக்கிறாள். அப்போது அவள் சிந்தையுள்ளே சிங்கப்பிரானே திகழ்கின்றான்.

உக்கிரமான அவனது அரியுருவும்கூட பக்தனிடத்தில அவன்கொண்ட பேரன்பின் வெளிப்பாடன்றோ!

வேதவேத்யனான ஸர்வேஶ்வரனின் வ்யூஹமூர்த்தியான ஸங்கர்ஷண ஸ்வரூபமே நரஸிம்ஹனாய்த் தோன்றியதை ஸ்ரீந்ருஸிம்ஹபூர்வதாபிநீ உபநிஷத் பரக்க உரைக்கின்றது.

திருமால் தன் நாபிக்கமலத்தில் நான்முகனைப் படைத்தபின், அவன் முன்னே தனது திவ்யமான நரஸிம்ஹரூபத்தில் தோன்றி,

'உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுக$_2$ம் |
ந்ருஸிம்ஹம் பீ$_4$ஷணம் ப$_4$த்$_3$ரம் ம்ருத்யு - ம்ருத்யும் நமாம்யஹம் ||'

என்ற நரஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரத்தைக் கொண்டு, தன்னைக் குறித்துத் தவம் செய்து உலக சிருஷ்டிக்கு ஆதாரமான நான்மறைகளைப் பெறும் திறலடைய உபதேசித்தார்.

இந்த நரஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரம் எம்பெருமானுடைய எண்ணிறந்த திருக்கல்யாணகுணங்களில் ஒன்பது மஹா குணங்களை உணர்த்தும் வண்ணம் 1. உக்ர நரஸிம்ஹர்,

2. வீர நரஸிம்ஹர், 3. ஸர்வ வ்யாபக நரஸிம்ஹர், 4. ஜ்வாலா நரஸிம்ஹர், 5. ஸர்வஜ்ஞ நரஸிம்ஹர், 6. ஸ்ரீலக்ஷ்மீந்ரஸிம்ஹர், 7. பீ₄ஷணநரஸிம்ஹர், 8. மங்களநரஸிம்ஹர், 9. ஸம்ஸார நிவர்த்தக நரஸிம்ஹர் ஆகிய நவ நரஸிம்ஹர்களை நம் கண்முன்னே எழுந்தருளச் செய்கிறது.

ஞானக் கண்ணுக்கு இலக்காகும் இந்த நவநரஸிம்ஹர்களும் நம் ஊனக்கண்ணுக்கும் இலக்காயின் எத்தனை இனிது! அதற்காகவே, பின்னானார் வணங்கும் சோதியாய் – அர்ச்சாமூர்த்தியாய் – இந்த நவநரஸிம்ஹர்களும் 'ஸ்ரீஅஹோபிலம்' என்ற திவ்யதேசத்தில் ஸேவை ஸாதித்தருள்கின்றனர்.

மார்க்கம் : மிகப்புராதனமான இந்த நவநரசிம்ம திவ்யக்ஷேத்ரம் ஆந்திராவில் நந்தியால் ரயில்வே நிலையத்திலிருந்து 68 கி.மீ. தூரத்திலும் அர்லகட்டா தாலுக்கா தலைமையிடத்திலிருந்து 24 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. நந்தியாலிலிருந்து அர்லகட்டா வழியாகவோ அல்லது சென்னை – மும்பை மார்க்கத்தில் உள்ள கடப்பா ரயில் நிலையத்திலிருந்து 64 கி.மீ. தூரத்தில் உள்ள அர்லகட்டாவிற்கு வந்தோ அங்கிருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீஅஹோபிலத்தினை பேருந்துப் பயணத்தின் வாயிலாக வந்தடையலாம். தோன் (Dhone) ரயில் நிலையத்திலிருந்து பங்கனபள்ளி, கோயில்குண்டா வழியாகவும் இந்த திவ்யதேசத்தை அடையலாம்.

பெயர்க்காரணம் : இந்த திவ்யதேசம் அஹோபிலம், அஹோபலம், சிங்கவேள் குன்றம், நவநரஸிம்ஹ க்ஷேத்ரம், பஞ்சக்ரோஸ க்ஷேத்ரம் (பத்துமைல் / 16 கி.மீ. சுற்றளவுப்பிரதேசம்) வேதாசலம், கருடாசலம், வீரக்ஷேத்ரம் என்ற பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டுக்களில் 'அஹோபஃ₃லம்' என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஹோ வீர்யம் அஹோஸௌர்யம் அஹோபா₃ஹுபராக்ரம: |
நாரஸிம்ஹம் பரம் தை₃வம் அஹோப₃லம் அஹோப₃லம் ||

என்ற நரஸிம்ஹ ப்ரபத்தி ஶ்லோகத்தில் தேவர்கள் சிங்கப்பெருமானது

வலிமையைக் குறித்து 'அஹோபலம்!' (என்னவொரு வலிமை!) என்று வியந்து துதித்த அச்சொல்லே இந்தக்ஷேத்ரத்திற்குப் பெயராகியது என்பர்.

தன்னைக் குறித்துத் தவம்செய்த கருட பகவானுக்கு இந்த மலையின் அகன்ற (அஹோ) குகையில் (பிலத்தில்) பகவான் நவநரஸிம்ஹ திவ்யமங்கள ரூபங்களில் ஸேவைஸாதித்தால் இதற்கு 'அஹோபிலம்' என்ற பெயர் ஏற்பட்டதாகவும் வரலாறு.

புராணப்பெருமைகள் :

ஆந்திரப்பிரதேசம் கர்நூலில் தொடங்கி சித்தூர் மாவட்டம் வரை நெடுகவிரிந்த 'நல்லமலா' என்றழைக்கப்படும் நல்லமலைத் தொடர் ஆதிசேஷ வடிவாய் திருமலை திருப்பதியைத் தன் தலைப்பகுதியாகவும் ஸ்ரீ அஹோபிலத்தைத் தன் மையப்பகுதியாகவும், ஸ்ரீஸைலத்தைத் தன் வால்பகுதியாகவும் கொண்டது என்ற புராணப் பிரஸித்திபெற்றது.

'ஸிம்ஹாசல மஹாத்ம்யம்' என்கிற ஸிம்ஹாசல ஸ்தலபுராணமும் இப்பூவுலகில் மிகுந்தமுக்யத்வம் வாய்ந்த நான்கு திவ்யக்ஷேத்ரங்களில் அஹோபிலமும் ஒன்று என அறுதியிடுகிறது. இந்த திவ்யதேசத்தின் ஸ்தலபுராணம் பதினெண்புராணங்களில் ஒன்றான பிரம்மாண்ட புராணத்தின் பத்து அத்யாயங்களில் விளக்கப் பெற்றுள்ளது. அவையாவன : 1. இந்த திவ்யதேசத்தின் மேன்மை 2. பகவத் தரிசனத்திற்காக கருடன் செய்த தவம் 3. க்ஷேத்ரத்தில் உள்ள தீர்த்தங்களைப்பற்றிய விவரணங்கள் 4. இந்த நவநரஸிம்ஹக்ஷேத்ரத்தில் ப்ரஹ்மா, பரத்வாஜ – கோபில ரிஷிகள், பரசுராமர் ஆகியோர் செய்த தவம் 5. ஜய – விஜயர்கள் ஹிரண்யாக்ஷ – ஹிரண்யகசிபுக்களாக அசுரப்பிறவியெடுத்த வரலாறு, 6. ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானின் பிறப்பு, தந்தையான இரணியன் அவனுக்கிழைத்த துன்பங்கள் (7) பாலகன் ப்ரஹ்லாதனுடைய உறுதியான பகவத்பக்தி, அவனுக்காகத் தூணிலிருந்து வெளிப்பட்ட சிங்கப்பிரான் இரணியன் மார்வம் கீண்டமை (8) சிவனுடைய

சரபரூபத்தை சிங்கப்பெருமான் அழித்தொழித்தமை (9) பவநாசினி என்ற புண்ய நதியினை இந்த திவ்யக்ஷேத்ரத்திற்குக் கொண்டுவர கடும்முயற்சிகள் செய்த பைரவமூர்த்தி இந்த ஸ்தலத்துக்குக் காவல்தெய்வமாக ஆன சரித்திரம் (10) சாஸ்த்ர விதிகளைக் கடைப்பிடிக்க இயலாத ஒரு பாமரனும்கூட பக்தியுடன் இங்குள்ள ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனை வழிபட அதனால் மோக்ஷ உலகினையே அடையமுடியும் என்கிற பேருண்மை ஆகியவற்றை விரிவாக விளக்குகிறது ப்ரஹ்மாண்ட புராணம்.

ஸந்நிதிகளின் அமைப்பு :

ஸ்ரீஅஹோபில திவ்யதேசத்தை அடைந்தவுடன் மலையடி வாரத்தில் உள்ள கோவிலில் ப்ரஹ்லாத வரதநரஸிம்ஹப் பெருமானின் ஸந்நிதி அமைந்துள்ளது. இது 'சின்ன அஹோபிலம்' என்றும் 'திகுவ திருப்பதி' என்றும் அழைக்கப்படுகிறது.

இங்கிருந்து 8 கி.மீ. தொலைவில் மேல அஹோபிலம் எனப்படும் மலைமேல் உள்ள கோவிலுக்கு வாகனங்களில் செல்லமுடியும். கடல் மட்டத்திலிருந்து 2800 அடிக்குமேல் உள்ள இந்த மேலஅஹோபிலத்திற்குச் செல்லும் வழியெங்கும் இயற்கை எழில் கொஞ்சம் பசுமையான வனப்பிரதேசங்களும், மனங்கவர் மலைகளும், அவற்றின் சுனைகளிலிருந்து பொங்கிப்பாயும் அருவிகளும் நம்மை வியக்கவைக்கின்றன. ஆங்கே, செழுமையும் வனப்பும் மிக்க வேதாத்ரி, கருடாத்ரி என்ற இருமலைச்சிகரங்களின் இடையே பவநாசினி என்ற புண்யதீர்த்தம் அந்தர்வாஹினியாகப் பாய்கிறது.

மேல அஹோபிலம் 'நகரி நிதினி', 'எகுவ திருப்பதி', 'பெத்த (பெரிய) அஹோபிலம்' என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. பெரிய திருவடி, விநதாஸுதன், வைநதேயன், பக்ஷிராஜன், கருத்மான் என்றெல்லாம் போற்றப்படும் கருடன் தனது நாதனான பகவான் ஸ்ரீமந்நாராயணனது ஆவேச அவதாரத்தை - பக்தவாக்ய பரிபாலகனாய், ப்ரஹ்மா இரணியனுக்குக் கொடுத்தவரம்

பழுதாகாவண்ணம் அவதரித்தருளிய நரஸிம்ஹ ரூபத்தைத் தரிசிக்கும் வேட்கையுடன் இந்த மலையில் நெடிய தவம்புரிய, அவருக்கு இங்குள்ள பெரிய மலைக்குகையொன்றில் ஸ்வயம்புமூர்த்தியாக ஸ்ரீஅஹோபில நரஸிம்ஹப்பெருமான் காட்சிகொடுத்து, பிற்காலத்தவரான நம்போல்வாரும் கண்ணாரக் கண்டு உருகும் வண்ணம் எழுந்தருளியிருக்கிறார்.

பின்னும், கருடனுக்குத் தன் ஒளியுருவைக் காட்டியருள்வதற்காக ஸத்ஸ்வரூப மஹாபுருஷனாகிற பகவான் அவரை அன்புடன் அழைக்க, அங்கிருந்து பத்துக்கல் தொலைவிலுள்ள மலைக்குகைக்கு மகிழ்வுடன் சென்ற கருடாழ்வானுக்கு ஜ்வாலா நரஸிம்ஹனாகக் காட்சி தந்தருளினார். "அஹோபிலமே அஹோபலம் அடியேனுக்கு!" என்று குதூஹலத்துடன் துதித்தான் 'வினைதைதன் சிறுவனான' வைநதேயன். 'தெய்வமல்லால் செல்லவொண்ணா சிங்கவேள் குன்றமே!' என்ற மங்கைமன்னன் பாசுரவரிக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது இந்த பவித்ரஸ்தலம்.

ஸத்யமும் தர்மமும் எங்கும் நிறைந்திருந்த மிகப்பழங்காலத்தில் இந்த அஹோபிலக் குகையின் ஒரு பகுதியிலிருந்து, பசும்புல் கூடப்பற்றி எரியும்படியான உக்ரமான பெருவெப்பம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது என்றும், அதனால் இக்குகையின் அந்த வாயில் பெரும் கற்பாறையினால் அடைக்கப்பட்டது என்பதும் கர்ண பரம்பரைச் செய்தி.

கருடன் தவம் புரிந்ததால் கருடாசலம் என்ற பெயர் பெற்ற இம்மலைக்கு வேதாசலம் என்ற பெயரும் உண்டு. ஸோமகன் என்ற அசுரன் பிரமனிடமிருந்து நான்மறைகளைக் கவர்ந்து செல்ல, அவற்றை மீட்க வேண்டி நான்முகன் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் நரஸிம்ஹப்பெருமானை வேண்ட, அவர் அவ்வசுரனைக்கொன்று வேதங்களை பிரமனுக்கு மீட்டுக் கொடுத்ததால் இம்மலைக்கு 'வேதாசலம்' என்ற பெயரும் ஏற்பட்டது

என்பர். பிரம்மாண்டபுராணத்தைத் தவிர கூர்மபுராணம், பாத்மபுராணம், விஷ்ணுபுராணம்-ஏன்-ஐந்தாவது வேதம் எனப் போற்றப்படும் இதிஹாஸமான மஹாபாரதத்திலும்கூட இந்த அஹோபில க்ஷேத்ரத்தின் வைபவமும் இங்கு எழுந்தருளியுள்ள நரஸிம்ஹப் பெருமானின் மஹிமைகளும் பரக்க உரைக்கப் பெற்றுள்ளன.

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானின் பக்திச் சரித்ரமும், அவனிடத்து அபசாரப்பட்ட அவனது தந்தையான வாளெயிற்று அவுணன் ஆணவத்தால் தூண்புடைப்ப ஆங்கோர் ஆளுகிர்ச்சிங்கவுருவாய் சினத்தீ பறக்கச் சீறிவந்து அந்தியம்போதில், அரண்மனைப்படியில், கோளரி தன்மடிமேல் இட்டுக் கூர்நகங்கொண்டு அவன் மார்வகம் கீண்ட வரலாறும் அனைவரும் அறிந்ததே!

அந்த இரணியவதைக் காட்சியினை தத்ரூபமாக இன்று நாமும் கண்டு மெய்சிலிர்க்கும்படியாக கீழ் அஹோபிலத்தில் எழுந்தருளியிருக்கும் உக்ர நரசிம்ம உத்ஸவமூர்த்தி பத்துத்திருக் கரங்களுடன் ஸம்ஹாரமூர்த்தியாகக் காட்சிதருகிறார்.

அகன்ற விழிகளில் கோபம் கொப்பளிக்க, அனலாய்க் கிளர்ந்தெழும் ஆவசேத்துடன் தனது மடியில் இரணியனைக் கிடத்தி ஒரு கரத்தால் அவனது தலையையும், மறுகரத்தால் இருகால்களையும் நெருக்கிப்பிடிக்க, மற்ற இருகரங்கள் அவன் வயிற்றினைக் கிழிக்க, அடுத்த இருகரங்கள் குருதியைக் குடிக்க, மேலெழுந்த இருகரங்கள் சங்க - சக்ரங்களைத் தாங்கியிருக்க, மீதமுள்ள இருகரங்கள் துஷ்டநிக்ரஹ திவ்யாயுதங்கள் தரித்திருக்கக் காட்சிதந்து நம்மிடத்தேயுள்ள அநாதிகால பாபவாசனைகளாகிற அசுரனை ஒழித்தருள்கிறார்.

நல்லோரை நலியும் வலியோரை நடுங்கவைப்பதாய்த் தனது ரௌத்ர ரூபம் இருப்பினும், அது ஆறாத காதல் கொண்ட அடியார்களது கண்களில் படாமலிருக்க, தனது திருமேனியை அலங்கரிக்கும் திவ்ய வஸ்த்ர-ஆபரணங்களுக்கிடையே அதனை

மறைத்துக் கொண்டு ஸேவை ஸாதிக்கிறான் போலும் அழகிய சிங்கப்பெருமான்!

ஸ்ரீ அஹோபில திவ்யதேச ஸ்தலபுராணம் காட்டும் நவநரஸிம்ஹர்களை வரிசையாக நாம் இங்கு அநுபவிப்போம் இனி.

1. ஸ்ரீ ப்ரஹ்லாத வரத நரஸிம்ஹப்பெருமான்

அஹோபில மலையடிவாரத்தில் உள்ள கோயிலில் ப்ரஹ்லாத வரதனான ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹர் கிழக்குநோக்கிய திருமுக மண்டலத்துடன் ஸேவைஸாதிக்கிறார். மூலமூர்த்தியின் இடப்புறத்தில் பாவன நரஸிம்ஹரும், அவருக்கு முன்புறத்தே உபய நாச்சிமார்களுடன் கூடிய ப்ரஹ்லாதவரதப்பெருமானும் உத்ஸவமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கின்றனர். அவர்களுக்கு முன்புறம் புறப்பாடு கண்டருளும் மூர்த்தியாக பத்துத் திருக்கரங்களுடன் கூடிய ஜ்வாலா நரஸிம்ஹப் பெருமான் ஸ்ரீதேவி, பூதேவி ஸமேதராக எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீஅஹோபில மடத்தினை ஸ்தாபித்தருளிய ஒன்றான ஸ்ரீ ஆதிவண்சடகோப ஜீயர் ஸ்வாமியும் அருகிலிருந்து பெருமாளை ஸேவிக்கும் திருக்கோலத்தில் தெற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் அர்ச்சா திருமேனியில் ஸேவை ஸாதிக்கிறார்.

2. ஸ்ரீபார்க்கவ நரஸிம்ஹப் பெருமான்

இங்கு முதலில் ஸேவித்த கீழ் அஹோபிலம் ப்ரஹ்லாத வரத நரஸிம்ஹப்பெருமான் ஸந்நிதியிலிருந்து 2கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது இந்த பார்க்கவ நரஸிம்ஹப்பெருமான் ஸந்நிதி. அஹோபில க்ஷேத்ர மலையொன்றில் 'பார்க்கவராமர்' எனப்படும் பரசுராமர், நரஸிம்ஹ பகவானைக் காணத்தவம் செய்த இடத்தில் அவரது பெயரால் 'பார்க்கவ தீர்த்தம்' என்றழைக்கப்படும் பவித்ரமான நீர்நிலை உள்ளது. அதனருகே அமைந்துள்ள இந்த ஸந்நிதியில் பார்க்கவராமனாகிய பரசுராமனுக்குக் காட்சியளித்த சிங்கப்பிரான் 'பார்க்கவ நரஸிம்ஹன்' என்ற திருநாமத்துடனே ஸேவை ஸாதிக்கிறார்.

3. ஸ்ரீயோகாநந்த நரஸிம்ஹப் பெருமான்

கீழ் அஹோபிலத்திலிருந்து தென்கிழக்கே 2½ கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது இந்த ஸந்நிதி. ஹிரண்ய ஸம்ஹாரத்திற்குப் பிறகு தன் பக்தனாகிய பாலகன் ப்ரஹ்லாதனுக்கு, பல்வேறு யோக நிலைகளில் இருந்து கொண்டு, தன்னை எப்போதும் நெஞ்சில் நிலை நிறுத்தி ஆனந்தமாக தியானிக்கும் முறைகளைக் கற்பித்த நரஸிம்ஹப் பெருமான் இந்த ஸந்நிதியில் ஸ்ரீயோகாநந்த நரஸிம்ஹப் பெருமானாக ஸேவை ஸாதித்தருள்கிறார்.

4. மேல அஹோபில நரஸிம்ஹப் பெருமான்

கீழ் அஹோபிலத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் மேல் அஹோபிலத்தில் உள்ள கோவிலில் நரஸிம்ஹப்பெருமான் ஸ்வயம்பு மூர்த்தியாக மலைக்குகையின் உட்பாறையில் புடைப்புச் சிற்பவடிவில் ஸேவை ஸாதித்தருள்கிறார். மலைக்குகையின் உட்புறமே இங்கே கர்ப்பக்ருஹமாக அமைந்துள்ளது. சக்கரத்தாழ்வாரும் இங்கு எழுந்தருளியுள்ளார். வேடுவர்களின் குலதெய்வமான ஸ்ரீமஹாலக்ஷ்மி, 'ஸ்ரீசெஞ்சுலக்ஷ்மி' என்ற திருநாமத்துடன் கர்ப்பக்ருஹத்தின் அருகேயுள்ள இடைகழியின் அறையில் கோயில் கொண்டுள்ளார். அருகில் காலியான அறை ஒன்றுள்ளது. ஸ்ரீவைகுண்டபதியான ஸ்ரீமஹாவிஷ்ணுவை அனைத்து அவதார காலத்திலும் 'அகலகில்லேன் இறையும்!' என்று உலகோர்க்கு உணர்த்தும் வண்ணம் ஜகந்மாதாவான ஸ்ரீமஹாலக்ஷ்மி இங்கு ஸாந்நித்யம் செய்தருள்வதாக ஐதிஹ்யம்.

இந்த மேல அஹோபிலக் குகைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் நரஸிம்ஹப்பெருமானே இந்த திவ்யதேசத்தின் ப்ரதான மூர்த்தியாவார். இவருடைய உத்ஸவமூர்த்தி கீழ் அஹோபில லக்ஷ்மீநரஸிம்ஹப்பெருமானின் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

5. ஸ்ரீக்ரோட$_3$கர நரஸிம்ஹப் பெருமான்:

மேல அஹோபிலத்தின் பிரதானக் கோவிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் மலையில் உள்ள நரஸிம்ஹ க்ஷேத்ரத்தில் க்ரோட$_3$கர நரஸிம்ஹப் பெருமான் எழுந்தருளியுள்ளார். 'க்ரோட$_3$:' என்ற சொல்

வராஹத்தைக் குறிக்கிறது. எனவே வராஹ வதனத்துடன் எழுந்தருளியிருந்துகொண்டு பெரியபிராட்டியாருடன் ஸேவை ஸாதித்தருளும் இந்த சிங்கப்பிரானுக்கு 'க்ரோட$_3$கர நரஸிம்ஹர்' என்றே திருநாமம்.

வராஹ காண்டத்தில் உள்ள நாராயண ஷடாக்ஷர ஜபபாராயணத்தை இந்தக் கோவிலில் தொடர்ந்து மூன்று நாள்கள் செய்துவர ஆத்மக்ஷேமத்திற்கான நற்பலன்கள் பெருகுவது இக்கோவிலின் தனிச்சிறப்பு என்பர்.

6. ஸ்ரீ காரஞ்ச நரஸிம்ஹப்பெருமான்

மேல அஹோபிலத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள மற்றொரு திருத்தலம் ஸ்ரீகாரஞ்ச நரஸிம்ஹப் பெருமான் ஸந்நிதி. இது கீழ் அஹோபிலத்திற்குச் செல்லும் பாதையிலிருந்து ஒரு ஃபர்லாங்தூரத்தில் அமைந்துள்ளது. காரஞ்ச வ்ருக்ஷத்தின் கீழ் எழுந்தருளியிருப்பதால் இந்த எம்பெருமானுக்கு 'காரஞ்ச நரஸிம்ஹர்' என்று திருநாமம். இங்கு சிங்கப்பெருமான் ஒரு திருக்கரத்தில் 'ஸார்ங்கம்' எனும் வில்லினையும், மற்றொரு திருக்கரத்தில் ஸுதர்ஶன சக்ரத்தையும் தரித்துக்கொண்டு, வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார்.

இங்குள்ள புண்யதீர்த்தம் 'பைரவகுண்டம்' என்று அழைக்கப்படுகிறது. துர்வாஸ மஹரிஷியால் சபிக்கப்பட்ட கோபிலரிஷி என்ற முனிவர் இங்கு வந்து பெருமானைக் குறித்து பக்தியுடன் தவம் செய்து பிரார்த்திக்க, இந்தக் காரஞ்ச மரத்தின் கீழ் அவருக்கு எம்பெருமான் நரஸிம்ஹ வடிவில் தரிசனம் கொடுக்க, அதனால் சாபம் நீங்கப்பெற்று உய்வடைந்தார் என்பது இத்திருத்தலத்தின் வரலாறு.

7. ஸ்ரீமாலோல நரஸிம்ஹப்பெருமான்

மேல் அஹோபிலம் ப்ரதான ஸந்நிதியான செஞ்சுலக்ஷ்மித் தாயாருடன் ஸேவை ஸாதிக்கும் நரஸிம்ஹப்பெருமான் கோவிலிலிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மற்றொரு முக்யமான ஸந்நிதி ஸ்ரீமாலோலப் பெருமான் ஸந்நிதி. சிங்கப்பிரான் கருணையே உருவான ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் கூடியவனாய் பக்தர்களைக் குளிரக் கடாக்ஷித்தருள்கிறான் இங்கே! 'மா' என்பது பெரியபிராட்டியாருக்குத் திருநாமம். 'லோலன்' என்ற சொல்லுக்கு லீலாரஸம் அநுபவிப்பவன் என்பது பொருள். 'அலகிலா விளையாட்டுடையனான' அவன் இந்த லீலாவிபூதியில் தனது பக்தர்களைப் பக்குவப்படுத்தி இன்புறும் விளையாட்டினை ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாருடன் சேர்ந்து அநுபவிப்பதற்காக 'மாலோலன்' என்ற திருநாமத்துடன் இங்கு ஸேவை ஸாதித்தருள்கிறான் என்பதை உணர்கையில் உள்ளம் உருகுகிறது.

இந்தப் பெருமானின் உத்ஸவமூர்த்தியான ஸ்ரீமாலோல ந்ருஸிம்ஹப் பெருமான் ஸ்ரீமத் அஹோபில மடத்தினை ஸ்தாபித்தருளிய ஒன்றான ஸ்ரீ ஆதிவண்சடகோப ஜீயர் ஸ்வாமியின் நித்ய திருவாராதனத்தில் எழுந்தருளியிருந்த காலம் தொடங்கி அந்த ஆசார்ய பரம்பரையில் தொடர்ந்துவரும் ஸ்ரீமத் அழகியசிங்கர்கள் அனைவரது நித்ய திருவாராதனத்திலும் எழுந்தருளியிருந்து கொண்டு, விசேஷமாக இன்றளவும் அவர்களது சிஷ்யபரிபாலன மங்களாசாஸன யாத்திரைகளிலும் கூடவே எழுந்தருளி 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமைகளைப் பெற்று' செல்லுமிடமெல்லாம் திவ்யதேசமாக்கியருளும் பெருமை பெற்றவர்!

8. ஸ்ரீ ஜ்வாலா நரஸிம்ஹப் பெருமான்

ஸ்ரீமாலோல நரஸிம்ஹப்பெருமான் கோயில் கொண்டிருக்கும் மேல அஹோபிலத்திலிருந்து 4 கி.மீ. தூரத்திற்கு மேல் நோக்கிச் செல்லும் மலைமுகட்டில் அமைந்துள்ள ஆச்சர்யகரமான இந்த ஸந்நிதியில் எழுந்தருளியுள்ளார் ஸ்ரீஜ்வாலா நரஸிம்ஹப்பெருமான்.

'அசலசாயா மேருமலை' என்றழைக்கப்படும் இந்த மலையில்தான், வெஞ்சினம் அனலாய்க் கிளர்ந்தெழ எம்பெருமான் ஆளரியாய்த் தோன்றி அசுர வேந்தன் இரணியனைக் கிழித்தெறிந்த சரிதம் நடந்ததாகக் கருதப்படுகிறது. இங்கு உக்ர நரஸிம்ஹப் பெருமான் மூன்றடி உயரமூலமூர்த்தியாக 'ஜ்வாலா நரஸிம்ஹன்' என்ற திருநாமத்துடன் பத்துத் திருக்கரங்களுடன் ஸேவைஸாதிக்கிறார்.

மேற்கரங்கள் சங்கசக்ரங்களை தரித்திருக்க, இருகைகள் இரணியனைத்தன் மடியில் கிடத்தி நெருக்கிப் பிடித்திருக்க இருகரங்கள் ஆவேசமாய் அவனது குடலைப்பிரித்தெறிய, மற்ற திருக்கரங்கள் துஷ்டநிக்ரஹ திவ்யாயுதங்களை ஏந்தியிருக்க, இடது திருவடியை மடித்தும் வலது திருவடியைத் தொங்கவிட்டுக் கொண்டும் ஸுகாஸநத்தில் வீற்றிருந்தருள்கிறார்.

அருகிலேயே வலப்புறத்தில் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் கூப்பிய கரங்களுடன் பாலகனாய்ச் சிறு உருவில் வணங்கிநிற்க, ஸ்ரீஜ்வாலநரஸிம்ஹப் பெருமானின் ஸந்நிவேசம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

9. ஸ்ரீபாவன நரஸிம்ஹப்பெருமான்

மேல அஹோபிலத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் பாவன நதிக்கரையில் அமைந்துள்ள இந்த ஸந்நிதியில் அந்த நதியின் பெயரையே தன் திருநாமத்துடன் இணைத்துக்கொண்டு பாவன நரஸிம்ஹராய் ஸேவைஸாதித்து நம்மை பவித்ரமடையச் செய்கிறான் எம்பெருமான்!

உக்ர ஸ்தம்பம்:

மேற்சொன்ன ஒன்பது திருத்தலங்களைத் தவிர, மேல அஹோபிலத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் தூண் போன்ற பெரும்பாறை அம்மலையை இரண்டாகப் பிளப்பதுபோல் அமைந்துள்ளது. இந்தப் பாறைத் தூணிலிருந்துதான் சிங்கப்பிரான் வெளிப்பட்டார் என்பது நெடுங்கால நம்பிக்கை. சங்கம், சக்ரம், திருமண்காப்பு ஆகியவை இந்தப் பாறைத்தூணில் பொறிக்கப் பெற்றுள்ளன.

ப்ரஹ்லாத மேடு:

உக்ர ஸ்தம்பத்திற்கும் மேல் அஹோபிலத்துக்கும் இடையே அமைந்துள்ள குகையொன்றில் உள்ள ப்ரஹ்லாத நரஸிம்ஹப் பெருமானின் சிறு ஸந்நிதி ப்ரஹ்லாதமேடு என்றழைக்கப்படுகிறது. இந்தச் சிறுகுகையில் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் எழுந்தருளியுள்ளார்.

அஹோபில க்ஷேத்ரத்தின் தீர்த்தங்கள்:

1. ரக்தகுண்டம் : இந்த திவ்யக்ஷேத்ரத்தில் உள்ள பல புண்ய தீர்த்தங்களில் ரக்தகுண்டம் என்கிற தடாகம் மிகவும் முக்யத்வம் வாய்ந்தது. சிங்கப்பிரான் இரணியனைக் கொன்றொழித்த பின்னர் தன் திருக்கரங்களை இத்தடாகத்தில் அமிழ்த்தி சுத்தம் செய்து கொண்டதாய்க் கருதப்படுகிறது. இதனால் இந்த தீர்த்தம் இன்றளவும் சிவந்தே காணப்படுகிறது.

2. லாஞ்ச கோனேரி : பார்க்கவ நரஸிம்ஹப்பெருமான் ஸந்நிதிக்கு வடகிழக்கில் 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள தீர்த்தம் லாஞ்ச கோனேரி என்றழைக்கப்படுகிறது. முற்காலத்திய ராஜசபை நடனமாது ஒருத்தி அஹோபில திவ்யதேசத்தில் நரஸிம்ஹப்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து, தனது பாவங்களை மன்னிக்க வேண்டி மன்றாடிப் பிரார்த்தித்தாள். அப்போது எம்பெருமானது ஆணைப்படி இத்தடாகத்தினை ஏற்படுத்தி, அதனால் தன் பாபங்கள் நீங்கப்பெற்றாள் என்பது வரலாறு.

3. ராமதீர்த்தம் : கீழ அஹோபிலத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் ராமதீர்த்தம் என்கிற திவ்யதடாகம் அமைந்துள்ளது. சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமன் இந்த திவ்ய தடாகத்தில் நீராடி அநுஷ்டானங்களைச் செய்ததால் இந்தத் தீர்த்தம் அவரது திருப்பெயராலேயே வழங்கப்படுகிறது.

4. ப$_4$வநாஶினி தீர்த்தம் : ஸ்ரீஅஹோபில திவ்யதேசத்தின் பிரதானமான தீர்த்தம் ப$_4$வநாஶினி ஆகும். ஸம்ஸாரமாகிற 'ப$_4$வத்தை' நாசம் செய்து முக்தி அடைவதற்கான தகுதியை

உண்டாக்குவதால் இதற்கு ப$_4$வநாஶினி என்று பெயர். இந்தத் தீர்த்தத்தில் பதிமூன்று புண்யதீர்த்தங்களும் கலந்துள்ளன. அவை நரஸிம்ஹ தீர்த்தம், ராம தீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், பீம தீர்த்தம், சங்க தீர்த்தம், வராஹதீர்த்தம், ஸூத தீர்த்தம், தோர தீர்த்தம், கஜகுண்டம், விநாயக தீர்த்தம், பைரவ தீர்த்தம், ரஜத குண்டம் ஆகியன. இவையனைத்தும் பவநாசினியின் பெருமைக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

இத்திருத்தலத்தின் மற்றைய சிறப்புக்கள் :

ஸ்ரீஅஹோபிலமடத்தின் ஏழாவது ஜீயராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் அழகியசிங்கர் இங்குள்ள வேடுவர்களின் குலதெய்வமான செஞ்சுலக்ஷ்மித்தாயாருக்கும் எம்பெருமானுக்கும் நடந்த திருக்கல்யாணத்தை 'வாஸந்திகா பரிணயம்' என்கிற தமது ஸம்ஸ்க்ருத நாடகத்தில் விவரித்துள்ளார்.

இத்திருத்தலத்து எம்பெருமான் ப்ரஹ்மாவாலும், ஸாக்ஷாத் பகவானது திருவவதாரங்களான ஸ்ரீராமபிரானாலும், ஸ்ரீவேங்கடேசப் பெருமானாலும் வணங்கப்பெற்றவர் என்ற பெருமை முக்யத்வம் வாய்ந்தது.

ஸ்ரீ அஹோபிலேஶனான ஸ்ரீந்ருஸிம்ஹப்பெருமானை வழிபட்டதன் பலனாக திருவேங்கடமுடையான் ஸ்ரீபத்மாவதித் தாயாரை திருக்கல்யாணம் செய்து கொண்டான் எனும் மங்கள வைபவம் இத்திருதலத்திற்கேயான மேன்மை!

அதுபோலவே, ஸ்ரீராமன் இந்தப் பெருமானின் புகழை ஐந்து ஶ்லோகங்களால் துதிக்க, அது 'நரஸிம்ஹ பஞ்சாம்ருதம்' என்று ப்ரஸித்தி பெற்றுள்ளது. இந்த ஸ்தோத்ரங்களும், வரலாறும் பரம ப்ரமாணமான நூல்களான ஹரிவம்ஶம், மோக்ஷ தர்மம் ஆகியவற்றில் பீஷ்ம – யுதிஷ்டிரர்களுக்கிடையேயான உரையாடலில் குறிப்பிடப்பெற்றுள்ளன. இந்த திவ்யதேசத்து எம்பெருமானது அருளால், சிறையிருந்த சீதாப்பிராட்டியாரைப் பற்றிய விபரங்கள் ஸ்ரீராமபிரானுக்குக் கிடைக்க, அதனால் அவர் ராவணனைக் கொன்றொழித்து ஜகந்மாதாவான ஜானகியை மீட்டெடுத்தான் என்பா.

இந்த திவ்யதேசத்தின் வைபவமும், ஸ்ரீமத் அஹோபில மடத்தின் திவ்யசரித்திரமும் பிரிக்கமுடியாதபடி ஒன்றிணைந்தவை. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் மேல்கோட்டை எனப்படும் திருநாராயணபுரத்தில் கிடாம்பி கேஶவாசார்யர் ஸ்வாமியின் திருக்குமாரராக அவதரித்த ஸ்ரீநிவாஸாசார்யர் இளம் பிராயத்திலேயே ஸகல ஶாஸ்த்ர விற்பன்னராய்த் திகழ்ந்து விஜயநகரப்பேரரசரான கிருஷ்ணதேவராயரது ராஜஸபை வாதஸதஸ்ஸில் விசிஷ்டாத்வைத தர்சனத்தை நிலைநாட்டிப் புகழ்பெற்றார். பின்னர், ஒரு நன்னாளில் திருச்சிங்கவேள்குன்றத்து எம்பிரானே ஒரு அந்தண வடிவில் வந்து அவருக்கு ஸந்யாஸ தீக்ஷை அளிக்க, அன்று முதல் ஸ்ரீஆதிவண்சடகோப ஜீயர் என்ற திருநாமத்துடன் ஸ்ரீஅஹோபிலத்து சிங்கப்பெருமானுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து கொண்டு எம்பெருமானார் தரிசனத்தை எங்கும் பரவச்செய்ய ஸ்ரீமத் அஹோபில மடத்தை நிறுவினார். அவர் அன்று தொடங்கி வைத்த கைங்கர்யஸ்ரீயானது அறுநூறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பெருகி, இன்றளவும் செழிப்புற நடந்துவருவது கண்கூடு.

பெரும்புலவர்களால் கொண்டாடப்பெற்ற ப்ரதாபருத்ரன் என்ற காகதீய மன்னனை (ஆட்சிக்காலம் கி.பி. 1295 - 1323) இத்திருத்தலத்து சிங்கப்பிரான் தடுத்தாட்கொண்டு இந்த திவ்யதேசத்திற்கான பற்பல திருப்பணிகளையும் அவனைக் கொண்டு செய்வித்தான் எனும் வரலாற்றுப்பின்னணி ஈண்டு உய்த்துணரத்தக்கது.

விஜய நகரப் பேரரசர்கள் அனைவரும் இந்தப் பெருமானின் பரமபக்தர்கள். ஹரிஹரர் தொடங்கி கிருஷ்ண தேவராயர், அச்சுத தேவராயர் போன்ற விஜயநகரப் பேரரசர்கள் அனைவரும் இந்த திவ்யதேசத்து எம்பெருமான்களை மிகுந்த ஈடுபாட்டுடன் வழிபட்டு வந்தனர் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

அஹோபில க்ஷேத்ர மாஹாத்ம்யம் முற்றிற்று.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

பெரியதிருமொழியில்

ஏழாம் திருமொழி – அங்கண்ஞாலம்

சிங்கவேள்குன்றம்

கலிநிலைத்துறை

அங்கண்ஞாலம்அஞ்ச அங்குஓராளரியாய் ★ அவுணன்
பொங்கஆகம்வள்ளுகிரால் போழ்ந்தபுனிதனிடம் ★
பைங்கணானைக்கொம்புகொண்டு பத்திமையால் ★ அடிக்கீழ்ச்
செங்கணாளிஇட்டிறைஞ்சும் சிங்கவேள்குன்றமே. 1

அலைத்தபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய் ★ அவுணன்
கொலைக்கையாளன்நெஞ்சிடந்த கூருகிராளனிடம் ★
மலைத்தசெல்சாத்தெறிந்தபூசல் வன்துடிவாய்கடுப்ப ★
சிலைக்கைவேடர்தெழிப்பறாத சிங்கவேள்குன்றமே. 2

ஏய்ந்தபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய் ★ அவுணன்
வாய்ந்தஆகம்வள்ளுகிரால் வகிர்ந்தஅம்மானதிடம் ★
ஓய்ந்தமாவும்உடைந்தகுன்றும் அன்றியும்நின்றுஅழலால் ★
தேய்ந்தவேயுமல்லதில்லாச் சிங்கவேள்குன்றமே. 3

எவ்வும்வெவ்வேல் பொன்பெயரோன் ஏதலனின்னுயிரை
வவ்வி ★ ஆகம்வள்ளுகிரால் வகிர்ந்தஅம்மானதிடம் ★
கவ்வுநாயும்கழுகும் உச்சிப்போதொடுகால்சுழன்று ★
தெய்வமல்லால்செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்றமே. 4

மென்றபேழ்வாய் வாளெயிற்றோர்கோளரியாய் ★ அவுணன்
பொன்றஆகம்வள்ளுகிரால் போழ்ந்தபுனிதனிடம் ★
நின்றசெந்தீமொண்டுசூறை நீள்விசும்பூடிரிய ★
சென்றுகாண்டற்கரியகோயில் சிங்கவேள்குன்றமே. 5

எரிந்தபைங்கணிலங்குபேழ்வாய் எயிற்றொடுஇதுஎவ்வுருவென்று ★
இரிந்துவானோர்கலங்கியோட இருந்தஅம்மானதிடம் ★
நெரிந்தவேயின்முழையுள்நின்று நீள்நெறிவாய்உழுவை ★
திரிந்தஆனைச்சுவடுபார்க்கும் சிங்கவேள்குன்றமே. 6

முனைத்தசீற்றம்விண்சுடப்போய் மூவுலகும்பிறவும் ★
அனைத்தும்அஞ்சஆளரியாய் இருந்த அம்மானதிடம் ★
கனைத்ததீயும்கல்லுமல்லா வில்லுடைவேடருமாய் ★
தினைத்தனையும்செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்றமே 7

நாத்தழும்பநான்முகனும் ஈசனுமாய்முறையால்
ஏத்த ★ அங்குஓராளரியாய் இருந்தஅம்மானதிடம் ★
காய்த்தவாகைநெற்றுஒலிப்பக் கல்லதர்வேய்ங்கழைபோய் ★
தேய்த்ததீயால்விண்சிவக்கும் சிங்கவேள்குன்றமே. 8

நல்லைநெஞ்சே! நாம்தொழுதும் நம்முடைநம்பெருமான் ★
அல்லிமாதர்புல்கநின்ற ஆயிரந்தோளனிடம் ★
நெல்லிமல்கிக்கல்லுடைப்பப் புல்லிலையார்த்து ★ அதர்வாய்ச்
சில்லுசில்லென்றொல்லறாத சிங்கவேள்குன்றமே. 9

★செங்கணாளிஇட்டிறைஞ்சும் சிங்வேள்குன்றுடைய ★
எங்களீசனெம்பிரானை இருந்தமிழ்நூற்புலவன் ★
மங்கையாளன்மன்னுதொல்சீர் வண்டறைதார்க்கலியன் ★
செங்கையாளன்செஞ்சொல்மாலை வல்லவர்தீதிலரே. 10

அடிவரவு:- அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வம் மென்ற எரிந்த முனைத்த நா நல்லை செங்கண் கொங்கு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

அஹோபி3ல நவநரஸிம்ஹர் மங்க3ள ஶ்லோகங்கள்

ஹிரண்ய-ஸ்த2ம்ப4-ஸம்பூ4த ப்ரக்2யாத-பரமாத்மனே ।
ப்ரஹ்லாதா3ர்திமுஷே ஜ்வாலாநரஸிம்ஹாய மங்க3ளம் ॥ 1

க3ருடா3த்3ரி கு3ஹே கே3ஹே க3ஜகுண்ட3-ஸரித்தடே ।
ஹிரண்ய தநு ஸம்ஹார ஹரிஸிம்ஹாய மங்க3ளம் ॥2

வாரிஜா வாரித ப4யை: வாணீபதிமுகை2ஸுரை: ।
மஹிதாய மஹோதா3ர-மாலோலாயாஸ்து மங்க3ளம் ॥ 3

வராஹகுண்டே3 மேதி3ன்யை வாஞ்சிதார்த2 ப்ரதா3யிநே ।
த3ந்தலக்3ந ஹிரண்யாக்ஷ த3ம்ஷ்ட்ரஸிம்ஹாய மங்க3ளம் ॥ 4

கோ3பூ4ஹிரண்ய நிர்விண்ண கோ3பி3ல ஜ்ஞாநதா3யிநே ।
ப்ரப4ஞ்ஜந-ஸுதாஸீந காரஞ்சாயாஸ்து மங்க3ளம் ॥ 5

பா4ர்க3வாக்2ய தபீ3ஶாந பா3வநா பா4விதாத்மநே ।
அக்ஷய்ய தீர்த2 தீரஸ்த2 பா4ர்க3வாயாஸ்து மங்க3ளம் ॥ 6

சதுராநந சேதோப்3ஜ சித்ரபா4நு ஸ்வரூபிணே ।
வேதா3த்3ரி க3ஹ்வரஸ்தா2ய யோகா3நந்தா3ய மங்க3ளம் ॥

ஹாஹாஹூஹ்ற வாக்2ய க3ந்த4ர்வ ந்ருத்தகீ3த ஹ்ருதாத்மநே ।
ப4வஹந்த்ரு பத3 ச்ச2ந்ந வடுஸிம்ஹாய மங்க3ளம் ॥ 8

பா4ரத்3வாஜ மஹாயோகி3 மஹாபாதக ஹாரிணே ।
தாபநீய ரஹஸ்யார்த2 பா4வநாயாஸ்து மங்க3ளம் ॥ 9

ஶ்ரீஶடா2ரி யதீந்த்ராதி யோகி3 ஹ்ருத் பத்3ம பா4நவே ।
ஸர்வத்ர ஸம்பூர்ணாயாஹோபி3லேஶாயாஸ்து மங்க2ளம் ॥

மங்க3ளாசாஸநமித3ம் மாநிவாஸமுநீரிதம் ।
மஹநீயம் பட2ன் ஶ்ருண்வன் மங்க3ளாயதநம் ப4வேத் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

|| புருஷோத்தமயோக$_3$: ||

(பஞ்சத$_3$ஶோऽத்$_4$யாய:)

(ஸ்ரீமத்$_3$ ப$_4$க$_3$வத்$_3$கீ$_3$தையில் 15வது அத்$_4$யாயம்)

ஸ்ரீபகவாநுவாச

ஊர்த்$_4$வமூலமத$_4$: ஶாக$_2$மஶ்வத்த$_2$ம் ப்ராஹுரவ்யயம் |
ச$_2$ந்த$_3$ாம்ஸி யஸ்ய பர்ணாநி யஸ்தம் வேத$_3$ ஸ வேத$_3$வித் || 15.1

அத$_2$ஶ்சோர்த்$_4$வம் ப்ரஸ்ருதாஸ்தஸ்ய ஶாகா$_2$
கு$_3$ணப்ரவ்ருத்$_3$தா$_4$ விஷயப்ரவாலா: |
அத$_4$ஶ்ச மூலாந்யநுஸந்ததாநி
கர்மாநுப$_3$ந்தீ$_4$நி மநுஷ்யலோகே || 15.2

ந ரூபமஸ்யேஹ ததோ$_2$பலப்$_4$யதே
நாந்தோ ந சாதி$_3$ர்ந ச ஸம்ப்ரதிஷ்டா$_2$ |
அஶ்வத்த$_2$மேநம் ஸுவிரூட$_4$மூலம்
அஸங்க$_3$ஶஸ்த்ரேண த்$_3$ருடேந சி$_2$த்த்வா || 15.3

தத: பத$_3$ம் தத்பரிமார்க்கி$_3$தவ்யம்
யஸ்மிந்க$_3$தா ந நிவர்த்தந்தி பூ$_4$ய: |
தமேவ சாத்$_3$யம் புருஷம் ப்ரபத்$_3$யே
யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ || 15.4

நிர்மாநமோஹா ஜிதஸங்க$_3$தோ$_3$ஷா
அத்யாத்$_4$மநித்யா விநிவ்ருத்தகாமா: |
த்$_3$வந்த்$_3$வைர்விமுக்தா: ஸுக$_2$து:$_3$க$_2$ஸஞ்ஜ்ஞை:
க$_3$ச்ச$_2$ந்த்யமூடா:$_4$ பத$_3$மவ்யயம் தத் || 15.5

ந தத்$_3$பா$_4$ஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக: |
யத்$_3$க$_3$த்வா ந நிவர்த்தந்தே தத்$_3$தா$_4$ம பரமம் மம || 15.6

மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூ$_4$த: ஸநாதந: |
மந: ஷஷ்டா$_2$நீந்த்$_3$ரியாணி ப்ரக்ருதிஸ்தா$_2$நி கர்ஷதி || 15.7

ஶரீரம் யத$_3$வாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: |
க்$_3$ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்க$_3$ந்தா$_4$நிவாஶயாத் || 15.8

ஶ்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்ஶநம் ச ரஸநம் க்4ராணமேவ ச |
அதி4ஷ்டா2ய மநஶ்சாயம் விஷயாநுபஸேவதே || 15.9

உத்க்ராமந்தம் ஸ்தி2தம் வாऽபி பு4ஜ்ஞாநம் வா கு3ணாந்விதம் |
விமூடா4 நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ: || 15.10

யதந்தோ யோகி3நஶ்சைநம் பஶ்யந்த்யாத்மந்யவஸ்தி2தம் |
யதந்தோऽப்யக்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்யசேதஸ: || 15.11

யதா3தி3த்யக3தம் தேஜோ ஜக3த்பா4ஸயதேऽகிலம் |
யச்சந்த்4ரமஸி யச்சாக்3நௌ தத்தேஜோ வித்3தி4 மாமகம் || 15.12

கா3மாவிஶ்ய ச பூ4தாநி தா3ரயாம்யஹமோஜஸா |
புஷ்ணாமி சௌஷதீ4: ஸர்வா: ஸோமோ பூ4த்வா ரஸாத்மக:|| 15.13

அஹம் வைஶ்வாநரோ பூ4த்வா ப்ராணிநாம் தே3ஹமாஶ்ரித: |
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்வித4ம் || 15.14

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி3 ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச |
வேதை3ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்3யோ
வேதா3ந்தக்ருத்3வேத3விதே3வ சாஹம் || 15.15

த்3வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச |
க்ஷர: ஸர்வாணி பூ4தாநி கூடஸ்தோ3ऽக்ஷர உச்யதே || 15.16


உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா3ஹ்ருத: |
யோ லோகத்ரயமாவிஶ்ய பி3ப4ர்த்யவ்யய ஈஶ்வர: || 15.17

யஸ்மாத்க்ஷரமதீதோऽஹமக்ஷராத3பி சோத்தம: |
அதோऽஸ்மி லோகே வேதே3 ச ப்ரதி3த: புருஷோத்தம: || 15.18

யோ மாமேவமஸம்மூடோ4 ஜாநாதி புருஷோத்தமம் |
ஸ ஸர்வவித்3ப4ஜதி மாம் ஸர்வபா4வேந பா4ரத || 15.19

இதி கு3ஹ்யதமம் ஶாஸ்த்ரமித2முக்தம் மயாऽநக4 |
ஏதத்3பு3த்4வா பு3த்3தி4மாந்ஸ்யாத்க்ருதக்ருத்யஶ்ச பா4ரத || 15.20

|| இதி ஶ்ரீமத்2ப4க3வத்3கீ3தாஸூபநிஷத்ஸு
ப்3ரஹ்மவித்3யாயாம் யோக3ஶாஸ்த்ரே
ஶ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே3 புருஷோத்தமயோகோ3
நாம பஞ்சத2ஶோऽத்4யாய: ||



ஸிம்ஹாசலம்

ஸ்ரீவராஹ நரஸிம்ஹர்





அஹோபிலம்

நரஸிம்ஹர்

வெளியீடு

கிஞ்சித்காரம் ட்ரஸ்ட்

6, பீமஸேனா கார்டன் தெரு, மைலாப்பூர், சென்னை – 600 004.

போன் : 044 – 24992728.

little mite

Web : kinchit.org, E-mail : kinchitkaram@yahoo.co.in